www.tamilarangam.net

# சுவடுகள்



சிதைவுறும் முகங்கள்

www.tamilarangam.net






R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# சிதைவுறும் முகங்கள்



'நாகரிகம்' என்ற பெயரிலும், 'விஞ்ஞானம்' என்ற பெயரிலும் நடைபெறும் சில நிகழ்ச்சிகள் மனிதகுலம் தனது அடையாளத்தை இழக்கவும், எதிர்பாராத ஆபத்துகளைச் சந்திக்கவும் காரணமாகின்றன. இவ்வாறான ஆபத்தில் உலகெங்கும் வாழும் பழங்குடி மக்கள் சிக்குண்டுள்ளனர்.

பழங்குடி மக்களின் இயல்பான வாழ்க்கை 'நாகரிகம்' அடைந்த மனிதர்களால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. அவர்களின் பாரம்பரிய வாழிடங்கள் அழிக்கப்பட்டு 'நாகரிகம்' அடைந்த மனிதர்களின் தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

உலக ரீதியில் பழங்குடி மக்களின் வாழிடங்களைக் காக்கவும் அவர்களின் வாழ்வு முறையைச் சிதைக்காமல் கல்வி, மருத்துவம் போன்ற வசதிகளை வழங்குவதன் மூலம் அவர்களைச் சமூகத்துடன் இணைக்கவும் 'சேவைவல் இன்ரநாஸ்னல் (Survival International) என்ற அமைப்பு பணியாற்றி வருகிறது. தென்னமெரிக்காவில் அழிக்கப்பட்டுவரும் மழைக்காடுகள் உட்படப் பல இடங்களிலும் இவ்வாறான சேவை மிக அவசியமானது. பிரேசில், வெனிசுவேலா, அவுஸ்திரேலியா உட்படப் பல நாடுகளில் இவ் அமைப்பு பணியாற்றி வருகிறது.

இவ் அமைப்பு அண்மையில் பிரிட்டனில் 'சொர்க்கத்தின் விம்பங்கள்' (Images of Paradise)என்ற ஓவிய, புகைப்படக் கண்காட்சியை நடத்தியது. எலிசபெத் பிளகாட்டர், பிரிஜட் ரிலி, பீற்றர் பிழேக் போன்ற புகழ் பெற்ற கலைஞர்கள் உட்பட அறுபதுக்கு மேற்பட்டோர் பங்குபற்றிய கண்காட்சியின் இறுதியில் படைப்புகள் ஏலம் விடப்பட்டு இருபது வருடங்களாக இயங்கிவரும் அமைப்புக்கு நிதி சேகரிக்கப்பட்டது. இக் கண்காட்சியில் இடம்பெற்ற 'ஒரு மனிதனின் தலை' (Head of a man) என்ற ஓவியமே அட்டையில் உள்ளது. ஓவியத்தை வரைந்தவர் எலிஸபெத் பிரிங்க்.

[redacted]

அபிமன்யு

[redacted]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நூறு ஆண்டுகள் காலனித்துவத்தின் பின் விடுதலை பெறும் நமீபியா

நூறு ஆண்டுகளாக காலனித்துவ ஆட்சியின்கீழிருந்த நமீபியா, இன்று சுதந்திர அரசொன்றை நிறுவ, தேர்தல் களை கொண்டுள்ளது.

1984இல் ஜேர்மனியின் காலனித்துவங்களுள் ஒன்றுக்கப்பட்ட நமீபியா, 1920களில் முதலாம் உலகமகாயுத்தத்தைத் தொடர்ந்து ஜேர்மனியின் மேலாதிக்கத்திலிருந்து நழுவியபோதும் பின்னா தென்னுபிரிக்க நிறவாதஅரசின் கைக்கு மாறியது.

அன்றைய நிலைமைகளில் தென்னுபிரிக்க மக்கள் ஸ்தாபனத்தில்(S W A P O) பிரதிநிதித்துவம்பெறும் நாடாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட நமீபியா அதனூடாக சுதந்திரஅரசொன்றை நிறுவுவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது. ஆயினும் காலப்போக்கில் தென்னுபிரிக்கஅரசு அக்குறிக்கோளை அடையவிடாமல் மும்முரமாக உழைத்ததோடு, நமீபியாவை தனது காலனியாக்கி தனது உச்சக்கட்ட சுரண்டல் கைங்கரியத்தை நமீபியாமீது பிரயோகித்துவந்தது.

1966களில் தென்னுபிரிக்க மக்கள்ஸ்தாபனம் ஐக்கியநாடுகள்சபையின் அதிகாரத்தின்கீழ் மாறியதைத்தொடர்ந்து ஐ.நா.ச. பல்வேறுவழிகளில் நமீபியவிடுதலையை வலியுறுத்திவந்தது. ஆயினும் தென்னுபிரிக்கா நமீபியாமீது அத்துமீறிய அதிகாரத்தைக் கொண்டிருந்தது.

இதேவேளையில் நமீபியமக்களுடைய காலனிய எதிர்ப்புவாதம், காலனித்துவத்தின் ஆரம்ப காலகட்டங்களில் இருந்தே எழுந்துவந்திருக்கின்றது. ஆரம்பகாலத்தில் அமைதியான முறையிலே முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் ஜேர்மனியப்படைகளாலும் பின்பு தென்னுபிரிக்க இராணுவத்தாலும் ஆயுதமுனையில் நசுக்கப்பட்டன. ஆனல் 1966களின்பின் இம்மக்களுடைய எதிர்ப்புவாதமானது ஆயுதந்தாங்கிய வடிவமாக பரிமாணம்பெற்று தென்மேற்கு ஆபிரிக்கமக்கள் ஸ்தாபனத்தின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

தென்மேற்கு ஆபிரிக்கமக்கள் ஸ்தாபனமானது தனது கிரமமான வேலைத்திட்டங்களூடாக வளர்ச்சியடைந்து இன்று நமீபியாவின் எதிர்காலத்தை நிர்மாணிக்கும் ஸ்தாபனமாகவுள்ளது.

இவ் ஸ்தாபனத்தின் தலைவரும், இன்றைய ஜனுதிபதித் தேர்தல் வேட்பாளருமான 'நுயூமா' தனது இளம்பிராயத்திலிருந்தே தன்னைப் போராட்ட சக்திகளுடன் இணைத்துக்கொண்டு பல்வேறு தியாகங்களூடாக இன்று நமீபியாவின் ஒப்பற்ற தலைவராக விளங்குகின்ருர். அறுபதுவயதான இவர் நமீபியமக்களின் பிரதிநிதியாக அங்கீகரிக்கப்பட்டு தென்னுபிரிக்க பாசிசஅரசின் தலைவர்களுடன் கைகுலுக்குவாரா என்பது இன்று பலராலும் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகின்றது.

நாட்டின் சனத்தொகையில் பெரும்பகுதியினர் படிப்பறிவற்ற பாமரமக்கள். நமீபியாவின் பொருளாதாரத் துறையிலே ஏகாதிபத்தியங்களே செல்வாக்குச் செலுத்துகின்றன. நாட்டின் பயிர்ச்செய்கைக்காக பயன்படும் நிலத்தின் பெரும்பகுதி வெள்ளைமுதலாளிகளின் உடைமைகளாகவுள்ளது. நமீபியாவின் பொன், மற்றும் கனிப்பொருள் அகழ்ச் சுரங்கங்கள் வெளிநாட்டுநிறுவனங்களின்கீழ் கீழுள்ளது. இவையே நமீபியாவின் பொருளாதாரத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அத்துசன் பொருளாதார மற்றும் இராணுவரீதியாய் கேந்திரமுக்கியத்துவம்வாய்ந்ததாகக் கருதப்படும் 'வல்விஸ்பாய்' துறைமுகம் தென்னுபிரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளது. நமீபியவிடுதலையைத் தொடர்ந்து தென்னுபிரிக்கா இத்துறைமுகத்தை நமீபியாவிடம் கையளிக்குமா என்பது இன்னமும் கேள்விக்குறியாகவேயுள்ளது.

மொத்தத்தில் நமீபியவிடுதலையின்பின் நாட்டைக் கட்டியெழுப்பும் பாரிய பணி தலைவர் நுயூமாவையும் தென்மேற்கு ஆபிரிக்க மக்கள்ஸ்தாபனத்தையும் சார்ந்துள்ளது. நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளே நாட்டின் எதிர்கால இறைமையை நிர்ணயிப்பனவாகவுள்ளன.

சதீஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நமீபிய விடுதலையைத் தொடர்ந்து நாட்டைக் கட்டியெழுப்புவதில் பல மேற்கு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா மற்றும் பல சோசலிச நாடுகள் உதவியளிக்க முன்வந்துள்ளன. இவற்றைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்தி தொடர்ந்தும் நமீபியாவின் இறைமையையும் சுதந்திரத்தையும் பேணுவதே தலைவர்களின் முன்னுள்ள பாரிய பணியாகும்.

நமீபியப் போராட்ட வரலாறானது இன்று சீர்குலைந்துள்ள எமது விடுதலைப் போராட்டப் பாதையில் புதிய ஒளியை ஏற்படுத்தாதா என்ற பெருமூச்சு எம்மனைவருக்கும் எழத்தான் செய்கின்றது.

## சஞ்சீவி

பலகாலம் இங்கிலாந்தில் இருந்துவிட்டு இலங்கை திரும்பிய ஒருவர் எதற்கெடுத்தாலும் ஆங்கிலத்திலேயே கதைத்தார். இதைக் கவனித்த அவரது பாட்டனுர் தனது மகளிடம் "என்னடி உன்ரை பெடியன் எதுக்கெடுத்தாலும் இங்கிலிசு கதைக்கிறுன், ஒருத்தருக்கும் ஒண்டும் விளங்கேல்லை" என்று குறைப்பட்டார்.

அதற்கு அவரது மகள் (இளைஞனின் தாய்) "அவன் கன காலம் இங்கிலண்டிலை இருந்ததாலை தமிழை மறந்திட்டான்"என்றுள்.

இதைக்கேட்ட பாட்டனுர் "எடி பிள்ளை உவன் கொஞ்சக் காலம் அங்கை இருந்ததாலை தமிழை மறந்திட்டான் எண்டிருய்,இப்ப இங்கை கொஞ்சக் காலத்திலை தமிழையும் மறக்க மாட்டான் எண்டது என்ன நிச்சயம்? நீ பார் இவன் போற போக்கிலை கடைசியிலை கதைக்கப் பாசை இல்லாமல் திரியப் போறுன்" என்றுர்.

டென்மார்க் தமிழ் டெனிஸ் நட்புறவுச் சங்கத்திலுல் வெளியிடப்படும்"சஞ்சீவி" மாசிகையின் ஒரு துணுக்கே இது.தொடர்புகட்கு - **CHANCHIVI, Denmarks gt 10, 7500 Holstebro, Danmark.**



## சுவடுகள்

ஆவணிமாதம், இலங்கைமீது குருதியை அபிசேகம் செய்துவிட்டுப் போய்விட்டது. சொர்க்கத் தீவில் ஐந்துவார காலப் பகுதியில் ஐயாயிரம் மனித உயிர்கள் பலியிடப்பட்டிருக்கின்றன. இக் காலப்பகுதியில் மக்களின் வாழ்வு ஸ்தம்பிதமாகியது மட்டுமல்ல, பெரியதோர் கேள்விக்குறியாகவும் ஆகியிருந்தது.

எழில்கொஞ்சும், முகில்தழுவும் மலைகளிலிருந்து ஒலியெழுப்பி நடைபயிலுகின்ற ஆறுகள் பிணங்களை இடம்பெயர்க்கும் பாவநீராக மாறிவிட்டிருந்தன. இனந்தெரியாத அச்சமும், எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கையும்தான் தேசத்தின் சொத்தாகிவிட்டன.

கொல்லப்பட்டவர்கள் எந்தக் கட்சிகளைச் சார்ந்திருந்தாலும்கூட அவர்கள் எமது மண்ணின் மக்கள். கொல்லப்பட்டோரில் பெரும்பாலானேர் ஆயுதம் தரிக்காத அப்பாவி இளைஞர்கள். வெறுமனே பழிவாங்கலுக்காக இவர்களில் அனேகர் மடிந்தனர். இறக்கும் கணத்தில் மட்டுமே துப்பாக்கியைப் பார்த்த சிலரும் இப்பட்டியலில் அடங்கியிருப்பர் என்பது கண்கூடு.

இலங்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை உன்னிப்பாக அவதானிப்பவர்களுக்கு இறப்பவர்களில் அனேகர் அப்பாவி இளைஞர்கள் என்பது தெரியும். இலங்கை அரசு தனது தொடர்புச் சாதனங்களின் வசதியால் பிரச்சாரப்படுத்துவதுபோல, கொல்லப்படுவோரெல்லாம் அரச ஆதரவாளர்களும் ஜே.வி.பி. ஆதரவாளர்களும் மாத்திரமல்லர்.

முதன்முதலாக வடக்கில் அவசரகாலநிலையைப் பிரகடனம் செய்து இன்பம், செல்வம் ஆகிய இளைஞர்களை இரவோடிரவாகச் சித்திரவதை செய்து, பண்ணைக்கடற்கரையில் குரூரமாகச் சிதைத்து எறிந்த அந்தக் கொடிய நாட்களை நாமெவரும் இலகுவில் மறந்துவிடமுடியாது.

அன்று எந்த அரசு அவசரகாலச்சட்டம் கொண்டு சடலமாக வீசியதோ அதே சிங்கள அரசு இன்று சிங்கள இளைஞர்களை அதே சட்டம் கொண்டு சடலமாக வீசுகிறது; உயிருடன் கழுத்தில் ரயர்களைப்போட்டுத் தீயிடுகிறது. பாதி எரிந்த பிணங்களாய் ஆற்றில் எறிகிறது. வீதியோரம் வரிசையாய்ப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிணங்களைக் கொட்டுகிறது. இந்நாட்களில் எந்தவொரு சிங்களக் கிராமமும் மரண ஓலம் கேளாது நாட்களைக் கழித்ததில்லை. தினசரி இந்த அரசால் கைதாகும் இளைஞர்களது எண்ணிக்கை பலநூருக இருப்பதை இந்த அரசு சாதனைபோலக் கருதிப் பிரச்சாரம் செய்கிறது.

'எமக்குநேர்ந்தது அவர்களுக்கும் நேரவேண்டும்; அப்போதுதான் அவர்களுக்குப் புத்திவரும்' என்பதுபோல் தமிழ்மக்களில் பலர் அடிக்கடி கூறுவதுண்டு. 'அவர்கள்' என்று குறிப்பிடப்படும் அந்தச் சிங்களமக்களில் பலர் எம்மில் எத்தனைபேரைக் கலவரகாலங்களில் தம்முயிரையும் வெறுத்துக் காப்பாற்றியிருக்கின்றனர்.

எம்மைப்போலவே சிங்கள மக்களும் ஆளும் வர்க்கத்தால் ஒடுக்கப்படுபவர்கள் என்ற உண்மை எம்மவரில் பலர் உணராதது, உணரவிரும்பாதது வருத்தத்திற்குரியது. நிறமோ, மொழியோ, மதமோ, இனமோ, தேசமோ வேறுபடுவதால் ஒடுக்கப்படும் ஒரு மக்கள் குழுவினர், இன்னேர் ஒடுக்கப்படும் மக்கள் குழுவினரை அந்நியமாக எண்ணுவதோ, நடாத்துவதோ எந்த ஒடுக்குமுறையிலிருந்தும் எவரையும் விடுவிக்காது.

தனது இருப்பைக் காப்பதற்காக எத்தனை மனித உயிர்களை வேண்டுமானுலும் பலியிடக் காத்திருக்கும் 'பௌத்த சிங்கள அரசுகள்' தமிழர்களுக்கோ, முஸ்லீம்களுக்கோ, சிங்களவர்களுக்கோ அடிப்படை ஜனநாயக உரிமைகளை மீட்டுத்தரும் என்று எவராவது நம்பினுல் அதைவிட முட்டாள்த்தனம் வேறேதும் இருக்கமுடியாது.

இன்று தாம் அமைதியாக வாழவேண்டும் என்ற காரணத்துக்காகத் தமது அடிப்படை உரிமையான வாக்குரிமையைப் பயன்படுத்திய சிங்களமக்கள், இன்று எல்லா உரிமைகளையும் இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இன்றைய சூழலில், ஒடுக்கப்படும் சிங்கள மக்களுக்காக நாம் குரல் கொடுக்கவேண்டிய வரலாற்றுத் தேவை எமக்குண்டு.

விசாரணையின்றி நீண்டகாலம் இளைஞர்களைத் தடுத்துவைத்து இலங்கை அரசு நடாத்தும் சித்திரவதைகளும் படுகொலைகளும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

எமது சகோதரர்கள்மீது திணிக்கப்பட்டுள்ள ஒடுக்குமுறைக்கு எதிராக சர்வதேச ரீதியில் உறுதியாக எதிர்ப்புக்குரல் எழுப்புவதோடு, ஒடுக்கும் சக்திகளை அம்பலப்படுத்துவதும், அடிப்படை மனித உரிமைகளுக்காகக் குரல்கொடுப்பதும், ஜனநாயகப் போர்வையுள் கிடக்கும் ஒடுக்கும் வர்க்கத்தை அம்பலப்படுத்துவதும், எல்லா ஒடுக்குமுறைகளில் இருந்தும் விடுதலை பெறத் துடிக்கும் எமது கடமையாகும். இக்கடமையிலிருந்து தவறிவிட்டு நாம் விடுதலைபற்றிப் பேசமுடியாது.






பெய்ரூட்டின் விதி எல்லோரும் அறிந்ததே. ஆனுல் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் அகப்பட யாரும் விரும்ப மாட்டார்கள். இலங்கையில் உண்மையில் இரண்டு யுத்தங்கள் நடைபெறுகின்றன. ஒன்று 1987 இல் இந்தியப் படைகள் வருகைக்கு காரணமான புலிகளுடனுன யுத்தம். 1983க்குப் பின்னர் ஏறத்தாழ 17,000 மக்கள் கொல்லப்பட்டனர். இலங்கையின் இரண்டாவது யுத்தமானது சிங்களத் தேசியத் தீவிரவாதிகளான ஜே. வி. பி க்கு எதிரான கொடூரமான யுத்தம். செப்டம்பர் 27 ம் திகதி முதல் அமுலான யுத்த நிறுத்தத்தின் முதல் ஆறு நாட்களில் மாத்திரம் 61 பேர் கொல்லப்பட்டனர். இராணுவத்தின் குடும்பங்களை ஜே. வி. பி யினரும், ஜே. வி. பியினரின் குடும்பங்களை இராணுவத்தினரும் கொல்லத் தொடங்கிய பிறகு கொலை வீதம் என்றுமில்லாதவாறு - ஒரு லட்சம் பேருக்கு நூறு பேர் அல்லது சனத்தொகையின் 0.1 வீதம் - அதிகரித்தது இலங்கையின் மரண வீதம் பஞ்சாபினுடைய கடந்த வருட மரண வீதத்திலும் எட்டு மடங்கு அதிகமானது. அல்ஸ்ரரின் தற்போதைய மரண வீதம் போல 25 மடங்கு அதிகமானது. 1980 களின் ஆரம்பத்தில் எல் சல்வடோரில் மாத்திரமே இதைவிட - மூன்று மடங்கு - அதிக கொலைகள் நிகழ்ந்துள்ளன. ஆபத்தான யுத்தங்கள் யாவும் அரசியல் யுத்தங்கள் அல்ல. வோஸிங்டன் டி.சி நகர மக்கள் இலங்கையர் போலவே போதை வஸ்துக்கெதிரான யுத்தத்தில் சிக்கிப் பெருமளவில் உயிரிழந்தனர்.

'தி எகனமிஸ்ட்
ஒக்டோபர் 7



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மலையக வரலாற்றில் நடேசய்யர்



நூற்றைம்பது வருடங்களுக்கு மேலாக இருண்ட வாழ்வில் இருக்கும் மலையக மக்கள் மத்தியில் வாழ்ந்த நடேசய்யர் மறைந்து நூற்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. மலையக மக்களின் சுபீட்சத்துக்காக புதிய தளம் அமைத்து வாழ்ந்த உத்தமனை நினைவுகூர்வதன் மூலம் மலையக மக்களின் நியாயபூர்வமான போராட்டத்தையும், அவர்களின் கடந்த காலங்களையும் ஓரளவு மீட்டுப் பார்க்க முடியும்.

"நாங்கள் உழைக்கவும் சாகவுமே பிறந்தவர்கள்" ஒரு தோட்டத்தொழிலாளியின் கல்லறையிலிருந்த வாசகம். மலையகத் தொழிலாளரின் வரலாற்றைப் புரட்டும் ஒவ்வொருவரும் இந்த வார்த்தைகளைப் புரிந்துகொள்வர். இக் காலகட்டத்தில் பிறந்த நடேசய்யர் "நீங்கள் உழைக்கவும் வாழவும் பிறந்தவர்கள்" என்று குரலெழுப்பி அவர்களின் வாழ்வுக்கு ஒளியேற்ற முற்பட்டார்.

மலையக வரலாற்றைப் பிரித்துப் பார்ப்பதாயின் நடேசய்யருக்கு முற்பட்ட, பிற்பட்ட காலங்கள் என்றே பிரித்துப் பார்க்க முடியும். அவ்வாறான ஒருவர் இன்று பலராலும் மறக்கப்பட்டுவிட்டார். மலையக வரலாற்றில் நடேசய்யரின் வருகைக்கு முன்பு தோட்டத்தொழிலாளர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுக்கும் கெடுபிடிகளுக்கும் ஆளாகி, வெளி உலகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்தனர். வெளியார் தோட்டங்களுக்குச் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்தது. தமக்குள் பொது அமைப்பு எதையும் அமைக்க தொழிலாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. சரியாகச் சொல்வதாயின் அவர்கள் மனிதர்களாகவே மதிக்கப்படவில்லை.



ஐயர் இலங்கையில் காலடி எடுத்துவைத்த காலத்தில் தனது வாழ்வில் பெரும் பகுதியை மலையக மக்களுக்காகச் செலவிடவிருப்பதாக நினைத்திருக்கவில்லை. ஆனால் அங்கு நிலவிய சூழ்நிலை, மக்களின் துயரங்கள் இவற்றால் மனம் வெந்து அங்கு தொடர்ந்து சேவை புரிய எண்ணினார்.

இலங்கையின் ஆரம்பகாலத் தொழிற்சங்கவாதிகளில் அய்யரும் ஒருவர். மலையகத்தைப் பொறுத்தவரை இவரே முதல் தொழிற்சங்கவாதியாவார்.

## —ஜீவன்—

ஐயர் தொழிற்சங்கம் தொடங்கிய காலம் மிகநெருக்கடி நிறைந்த காலமாகும். தோட்டங்களினுள் வெளியார் செல்வது மிகமிகச் சிரமம். இந்த நிலையில் தொழிற் சங்கம் அமைக்க அய்யர் பல வழிகளைக் கையாண்டார். தோட்டங்களில் நிகழும் திருமண வைபவங்களில் அழைப்பிதழ்களை அச்சிட்டுக் கொடுத்தார், அச்சிட்ட சில அழைப்பிதழ்களைத் தமக்கென வைத்துக் கொண்டார். ஏனெனில் அழைப்பிதழ்களின்றித் தோட்டங்களுக்குச் செல்ல அனுமதி கிடையாது. இவ்வாறு திருமணங்களுக்குச் செல்வோர் தொழிற்சங்கப் பிரசாரத்தில் ஈடுபடுவர். புடைவை வியாபாரியாகக் கூட அய்யர் தோட்டங்களில் நுழைந்து தமது பிரசாரத்தை மேற்கொண்டார்.

ஐயர் தோட்டப் புறங்களில் மட்டுமல்ல நகர்ப்புறத்திலும் தொழிலாளர் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தார். இந்த நிலையை அவதானித்த ஏ.ஈ.குணசிங்க தனது தலைமைக்கு ஆபத்து வரும் என எண்ணி இனவாதத்துக்குத் தூபமிட்டார். இது தொழிலாளர் பிரிவுபட வழிசமைத்தது. இக் கட்டத்தில் தான் இலங்கைத் தொழிலாளர் பாதையிலிருந்து மலையகத் தொழிலாளர் ஒதுக்கப்பட்டனர். அந்தப் பிளவு இன்னும் தொடர்கிறது.

அரசாங்க சபைக்குள் பிரவேசித்த நடேசய்யர் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களுக்காகப் போராட வேண்டியிருந்தது. இவர்கள் மீது இனவாத முலாம் பூசப்பட்ட பொழுதெல்லாம் அதனை மறுத்துரைத்ததுடன் தோட்டத் தொழிலாளர்களின் தேசியப்பற்றை சிங்கள இனவாதத் தலைவர்களுக்கு உணர்த்த வேண்டியும் இருந்தது. இதற்காக பல நிலையிலும் அவர் செயற்பட்டார். உண்மையில் ஐயரின் சட்டசபைபிரவேசம்,

இலங்கையில் வெளிவந்த முதல் தமிழ்த் தினசரியின் ஆசிரியர் நடேசய்யரே. 1921ல் நடேசய்யரால் ஆரம்பிக்கப்பட்ட 'தேச நேசன்' என்ற பத்திரிகை 1922 செப்டம்பரில் தனது முதல் ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. அவ்வேளை அது தினசரியாக வெளிவந்து கொண்டிருந்தது. இதுவே இலங்கையின் முதல் தினசரிப் பத்திரிகையாகும்.

ஆதாரம்: கொழுந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் ஒதுக்கப்பட்டிருந்த தோட்டத்தொழிலாளர்களின் நிலையை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதாகவும் அதற்கான விமோசனத்தை கோரிநிற்பதாகவும் அநீதிகளுக்கெதிரான கண்டிப்புக்களாகவுமே இருந்தன. ஆனல் பேரினவாதத் தலைவர்களின் செயற்பாடுகளின் முன் இவை செவிடன் காதில் ஊதிய சங்காக முடிந்தது. அரசாங்க சட்டசபை அதிகாரத்தில் பூரணத்துவம் பெற்ற சுதந்திர பாராளுமன்றமாக உருப்பெற்ற பொழுது ஐயர் கண்ட கனவுக்கு சாவுமணி அடித்ததாக பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் பல இலட்சக்கணக்கான மக்களின் பிரஜாவுரிமை பறிபோனது. இச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய போது ஐயர் இவ் உலகில் இல்லை.

ஐயர் எம்மிடத்தில் இருந்து பிரிந்து 42 வருடங்கள் ஆகிவிட்டநிலையில், மலையகமக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு 41 வருடம் கடந்துவிட்டநிலையிலும் அவர் விதைத்துவிட்டுச் சென்ற இலட்சியக்கனவுகள் கருகிவிடவில்லை. இன்றும் பல்வேறு வடிவங்களாக தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அவரின் கனவுகள் நனவாகும் காலம் வெகுதூரத்திற்கு செல்லப்போவதில்லை. மலையகமக்கள் இந் நாட்டின் ஏனைய பிரஜைகளுடன் சரிசமமாக வாழும் நிலை உருவாக்கப்பட வேண்டும். இதற்காக தமிழ்மக்களாகிய நாம் எல்லோரும் ஒரு அணியில் திரண்டு செயற்படுவதன் மூலம் அந்த உத்தமனை நினைவு கூர்வோம்.



ஆதவனின்

## மண்மனம்

முதல் பாகம்

"நீ இந்த உலகத்தில எதை நம்புகிருய்?" சுரேஸ் கேட்டான்.

"நானே... நான் எதை நம்புறனே... ம்... ம்ம்... என்னைத்தான் நான் நம்புறன் எண்டு சொல்லவேண்டிக் கிடக்கு. ஏனெண்டா மச்சான் எனக்குத் தெரியிற மனிசர் எல்லாம் போலியாய்ப், பொய்யாய் ஒரு வாழ்க்கை நடத்துறதுமாதிரி என்ர அனுபவத்தில தெரியுது. இவையள் ஏன் இப்பிடிப் பொய்சொல்ல வேணும்? இவையள் யாருக்காக நடிக்கவேணும்? இவையளுக்கெண்டொரு லட்சியமிருந்தா இவையளால எப்பிடிப் போலியா வாழமுடியும்? லட்சியமில்லாத மனிசர்தான் என்னைச் சுத்தியிருக்கினம். இவையட போலியும் பொய்யும் என்னை இவையள்லருந்து வேறுபடுத்துது. நான் தனியனய்ப் போவேனே என்ற பயத்தைவிட... இவையட போலியைக் கிழிக்க வேணும் எண்டுற ஆதங்கமும் ஆவேசமுந்தான் என்ர மனசில இருக்கு. நான் உணர்ச்சிவசப்பட்டுக் கதைக்கிறனெண்டு கோவிக்காதை...

நீயே யோசிச்சுப் பார்... எங்கடை ஆக்கள் செய்யிற வேலையை. எங்கட சனத்தின்ர வாழ்க்கையை ஒருக்கா யோசிச்சுப் பார். எப்படி வாழுகினம்? தற்பெருமை பேசி... தனக்கே தெரியாத ஒன்றுக்குப் புகழ்பாடி... தானே அறியாத ஒன்றை உயர்த்தி... தனக்குத் வேண்டாதவற்றைத் தாழ்த்தி...

சீ... இது எவ்வளவு selfishness"

ரகுநாதன் தன் இரு கைகளாலும் மயிரைத் தடவியபடியும்... கண்களைச் சிமிட்டியபடியும்... தனக்கேயுரிய பாணியில் சொல்லிக்கொண்டிருந்தான்.

"சரி... இனித் தொடங்கிட்டார். சுற்றிவர ஆர் இருக்கினம், அவைக்கு என்ன விளங்கும் எவ்வளவு விளங்கும் எண்டு தெரியாம அறுக்கவேண்டியதுதானே! நடத்து... நடத்து... நான் கேட்ட கேள்வி மச்சான்... எனக்குத் தெரியும் நீ இப்பிடித்தான் சொல்லுவாயெண்டு. எண்டாலும் ஒரு risk எடுத்துத்தான் கேட்டனன். இப்ப நீ இருக்கிற பிரச்சனைக்கும்... உன்னைப்போல இருக்கிற ஆக்கள் face பண்ணுற





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரச்சனைக்கும்... ஒரு ஒற்றுமை இருக்கு இல்லையெண்டுறியோ நீ? இல்லையெண்டா நீ அதை நிரூபிக்க வேணும்; எப்படி நிரூபிக்கப் போருய்?

சரி நான் மொட்டையாய்ப் போட்டு உடைக்கட்டே பிரச்சனையை... "

சுரேசும் விட்டபாடில்லை.

"வேண்டாம் ஒண்டையும் போட்டு உடைக்க வேண்டாம்.

நான் இப்ப சொன்னதில என்ன பிழை? என்னைச் சுற்றி உள்ளாக்களெல்லாம் போலியெண்டுறன், நடிக்கினம் எண்டுறன்.

முதல் நீ செய்யவேண்டிய வேலை அவை 'சின்சியரா' வாழுகினம் எண்டதை நிரூபிக்கிறதெல்லோ. அதை விட்டுட்டு என்ரை பிரச்சனைக்கும் அவையின்ள பிரச்சனைக்கும் ஒற்றுமையைத் தேடுறது எண்டுறது...

எனக்குப் போலியைவிட மிகப்போலியான ஒரு நடத்தை எண்டுதஏன் தெரியுது. சுரேஸ் இந்த இடத்தில நீ ஒண்டைக் கவனிக்க வேணும். 'சின்சியரா' வாழுகினமோ எண்டு பாக்கச் சொன்னன்... 'சின்சியர்' எண்டா... எதுக்கு 'சின்சியர்' எண்டதுதான் பிரச்சனை... என்க்கா... அல்லாட்டி... சொசைட்டிக்கா... அல்லாட்டிக் கடவுளுக்கா... அல்லாட்டித் தனது லட்சியத்துக்கா... அல்லது தான் நம்பும் ஏதோ ஒன்றிற்கா? நீ இதைப்பற்றிக் கொஞ்சம் யோசிக்கத்தான் வேணும். நீ என்னைப்பற்றி என்ன நினைச்சாலும் பரவாயில்லை. நான் சொல்லுறது இதுதான். அவனவன் தன்னைச் சுற்றியுள்ள புறவுலகத்தைப் புரிஞ்சுகொள்ள வேணும். புறவுலகத்தை எப்பிடிப் புரியமுடியும்? தன்னைக் கண்டு பிடிச்சாத்தான் புறவுலகம் எப்படி இருக்கெண்டு தெரியும். தன்னைக் கண்டுபிடிக்கிறதுக்கு என்ன செய்ய வேணும்? தனக்குத் தானே சின்சியரா இருக்கவேணும். அதாவது தன்னை முதல் தான் நம்பவேணும்..."

சொண்டைப் பற்களால் கடித்துவிட்டு பின் கைகளை... (குழந்தைகள், இல்லை என்பதற்கு விரல்களை விரித்து புறங்கைகளை ஆட்டுவார்களே) அதுபோல் ஆட்டிவிட்டு... லோங்ஸ் பொக்கற்றினுள் வலதுகையைவிட்டு ஏதோ தேடினன் ரகுநாதன். (பெரும்பாலும் சிகரெட்டாக இருக்கலாம்)

" ஐயோ கடவுளே நீ தொடங்கினுயெண்டா விடமாட்டாய். நான் தெரியாம வாயைக் குடுத்திட்டன். உன்னேடை இப்ப கொஞ்ச நாளாக் கதைக்கேலாம இருக்கு. நான் ஒண்டு சொல்ல... நீ ஏதோ ஒண்டு சொல்லுருய் போல இருக்கு. உன்னைப் புரிஞ்சுகொள்ளேலாம கிடக்கு. நீயெடாப்பா... நீ செல்லுறது சிலவேளையென்ன... பலநேரத்தில சரிதான். எண்டாலும் நீ பெரியாள் மாதிரி நிண்டுகொண்டு பெரிய குரு அல்லது ஒரு வாத்தியார் மாதிரி நிண்டுகொண்டு கதைக்கிறதுதான் எனக்குப் புடிக்கேல்ல. உன்னையெடாப்பா விழுங்கவும் முடியேல துப்பவும் முடியேல்ல. நீ ஏன் இப்பிடி நடக்கிருய்? கொஞ்சம் 'பிரக்டிக்கலா' இரேன். என்னப்போல, வசந்தனைப்போல, பாலேந்திரனைப்போல. நீ ஏன் பறக்கிருய்? இப்ப உதாரணத்துக்கு எடு! நான், நீ எதை நம்புருய் எண்டு ஒரு கேள்வியைக் கேட்க, நீ போலி, புறம், அகம், இலட்சியம், வாழ்க்கை இப்படிச் சொல்லுகளைக் கொண்ணந்து போட்டு நீயும் குழம்பி... நானும் குழம்பி... தேவையில்லாத வேலைதானே...!

என்னடாப்பா ரகு? நான் வேணுமெண்டுதான்... இதப்பற்றிச் சொல்லவேணுமெண்டு கனநாள் நினைச்சனுன். இப்பத்தான் சொல்லுறன்; குறைநினையாதை. நீ ஏன் இப்பிடி இருக்கிருய்?"

"நான் இப்பிடி இருக்கிறன்! ஏன் இப்பிடி? எண்டு கேள்வி கேக்க நீ ஆர்? நானும் திருப்பி அதே கேள்வியை உன்னட்டக் கேட்டா நீ என்ன செய்வாய்? இன்னும் விளக்கமாய்ச் சொல்லுறதெண்டா 'பிரக்டிக்கலா' வசந்தன்... பாலேந்திரன்... நீ... எண்டு சொல்லி, அவயளப்போல இரன் எண்டு சொன்னனியே...



நீ 'பிரக்டிக்கல்' எண்டு ஒண்டை நம்பிருய் எண்டும் அந்தக் கருத்துக்கு நீ 'சின்சியர்'எண்டும் தெரியுது ..இதவிட இதில வேற என்ன இருக்குது. இதுமாதிரித்தான் நானும், உன்ரை பார்வையிலை நானும்...என்ரை பார்வையிலை நீயும்... எவ்வளவு வித்தியாசம் எண்டு பாத்தியோ? இதுக்காகத்தான் நான் சொன்னனுன் என்னைத் தவிர வேறையொண்டையும் நம்பத் தயாரில்லையெண்டு."

ரகு இதைச் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே சுரேஸ் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.மணி 8.45க்கு மேல் ஆகியிருந்தது.

கொழும்பு நகரில் நெருக்கடிகள் நிறைந்த இடம்தான் 'கொட்டகேனு'. கொட்டகேனுவில் அதுவும் சனங்கள் அடிக்கடி சென்றுகொண்டிருக்கும் ஜம்பட்டாத் தெருவில்,அதுவும் ஒரு 'டே அன்ட் நைற்' ரீக்கடையில் ஒரு ரீக்கும் ஒரு பணிசுக்கும் 'ஓடர்'கொடுத்துவிட்டு அது வரும்வரையிலான இடைவெளியில் இவ்வளவும் கதைக்க முடிந்தது அவர்களால்.சற்றுப் பெலத்த சத்தத்தில்தான் கதைக்கவேண்டும். ரீ அடிக்கிற சத்தம், வாகனங்கள் தெருவில் போகிற சத்தம்,பக்கத்து ரேபிளில் இருக்கும் சனம் கதைக்கும் சத்தம், இப்படிப் பல சத்தங்களுக்கூடேதான் இவர்கள் சம்பாசிக்கவேண்டும்.

சுரேஸ் சற்று மெலிதான சத்தத்தில்தான் பேசிக்கொண்டிருந்தான். ஆனுல் ரகு எதைப்பற்றியுமே சட்டைசெய்யாமல் தனது எடுப்பான குரலில் பேசிக்கொணடிருந்தான்.

அக்கம்பக்கத்து ரேபிள்களிலெல்லாம் சிங்களவர்கள்தான் இருந்துகொண்டிருந்தார்கள். முன்னிரண்டு ரேபிள்கள்தான் காலியாயிருந்தன.

'பியதாச' ரீ ரூம் என்ற பெயருக்கிணங்க கல்லாப்பெட்டியில் தடித்த மீசையும் அரையில் கறுப்பு 4" பெல்ற்றுமணிந்த பியதாசவின் தம்பி நாணயக்கார இருந்துகொண்டிருந்தான்.

ஊத்த தமிழ்க் குரல் எங்கிருந்து வருகிறது என்ற நோக்குடன் பல சிங்களச் செவிகள் உலாவருகின்ற காலகட்டம் அது.



*என்ன தலைவர் பெரிய அரிவாளோடை போருர்?

*இண்டைக்கு அவையளின்ரை அமைப்பு சுயவிமர்சனக் கூட்டமாம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதுவும் பியதாசவின் கடையைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. தமிழ்ப் பெடியங்கள் பொதுவாகப் பியதாச கடைக்கு வருவதில்லை. சுரேசும் ரகுவும் மட்டும் விதிவிலக்கு. இவர்கள் பலகாலமாக இங்கு ரீ குடிக்க வருபவர்கள். அத்துடன் இருவருக்கும் சரளமாகச் சிங்களம் பேசவரும்.

பியதாசவிற்குத் தோள்பட்டையில் கையில்லாத பனியனுக்கூடாக இடதுகரையில் தெரியும் தழும்பு எழுபத்தேழு 'றையற்சில்' ஒரு தமிழ்மகன் வாளால் வெட்டியதென்றும்... பியதாசவின் கடையில் இப்பொழுதும் பாடிக்கொண்டிருக்கும் 'ஸ்ரீரியோ செற்' கொலன்னுவையிலிருந்த புங்குடுதீவுத் தர்மலிங்கத்தாற்றை என்பதும்... அடிக்கடி கொழும்புவாழ் தமிழ்ப் பொடியங்களாலை கதைக்கப்படும் ஒரு விடயம்.

தம்பி நாணயக்காரவுக்கும் பியதாசவுக்குமிடையில் நல்ல ஒற்றுமையுண்டு- பலவிதத்தில். இருவருக்குமிடையில் ஆறு வித்தியாசங்கள் கண்டுபிடி என்றால் அங்குள்ள தமிழ்ப் பெடியங்கள் ஒரே ஒரு வித்தியாசந்தான் சொல்லுவார்கள்.

'பியதாச கொஞ்சம் யோசிச்ச பிறகுதான் தமிழர்களை வெட்டுவான்,.. நாணயக்கார வெட்டியபிறகுதான் யோசிப்பான்.'

"இனிக்காணும் நிப்பாட்டு, பியதாசவின்ரை கடையிலையிருந்துகொண்டு கதைக்கிற கதையே இது? கொஞ்சம் மெதுவாய்ப் பேசு என்டாலும் கேக்கிறாய் இல்லை. இப்ப இருக்கிற நிலைமையிலை நீ இப்பிடிப் பெரிசாக்கதைச்சியேயென்டா மச்சான் பெரிய பிரச்சினையள் எல்லாம் வரும். உன்னோடை பக்கத்திலை நான் இருந்தனான் என்டதுக்காகக் கட்டாயம் என்னையும் அடிப்பாங்கள். நான் இதைப்பற்றி எத்தினை தரம் என்டுசொல்லுறது, என்ரை சுயநலத்துக்காக நான் இதைச் சொல்லேல்லை. நீ உடனை கேப்பாய் பாத்தியே என்ரை கதைகளைக் கூட உன்னாலை தாங்க முடியேல்லையென்டு, எனக்குத் தெரியும் உன்னைப்பற்றி... ஆனா... பியதாசவுக்கும் எங்களை வெட்டிறவங்களுக்கும் உன்னைப் பற்றியோ அல்லது உன்ரை 'இமேஜ்'ஜைப் பற்றியோ கொஞ்சமும் தெரியாது. "சுரேஸ் தனது கதைகள் முடிந்துவிட்டது போல் மௌனமானான்.

ரகுநாதனும் இரண்டு நிமிடமாக ஒன்றும் பேசவில்லை.ஏதோ யோசித்தவண்ணம் இருந்தான். சில நேரத்தில் ஏதோ சொல்லவாயெடுத்தான். பிறகு ஏற்கனவே பலதடவை இதுபற்றிச் சுரேசுக்குச் சொல்லிவிட்டேன் என நினைத்தோ என்னவோ மௌனமானான்.

● ● ● ● ●

ரகுநாதன் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. சுரேசுடன் பல தடவை இது மாதிரிக் கதைத்திருக்கிறான். ரகுநாதனுக்கு வடிவாகத் தெரியும் சுரேசைப் பற்றியும், அவனோடு எவ்வளவு தூரம் சம்பாசிக்கலாம் என்றும், சுரேஸ் ஒரு அப்பாவி என்ட நினைப்புத்தான் கூடுதலாக ரகுவிற்கு. ஆனால்....



அவன் திடீரென நரம்புகள் புடைக்க உணர்ச்சி மேலிட்டு பியதாசவின் கடையே அதிரும்படி கேட்ட இந்தக் கேள்வி....

"ரகு, நீ இந்த உலகத்திலை எதை நம்பிறாய் என்டு நான் சுத்தி வளைக்கேல்லை. நீ எந்த இயக்கத்தை நம்பிறாய்? LTTEயா, TELOவா, PLOTஆ, EPRLFவா, EROSஆ அல்லது NLFTயா? இதுதான் என்ர கேள்வி. இதுகள்தான் இனி எங்களை ஆளப் போகுது. நீ எதை நம்புறாய் ?"

கடையிலிருந்தவர்கள் எல்லோரும் திரும்பி ஒரு கணம் பார்த்தார்கள். நாணயக்காரவும் காசு எண்ணுவதை விட்டுவிட்டு இவர்களைப் பார்த்தான்.

இவர்கள் இருவரும் மௌனமானார்கள்.
ரகுநாதன் எழுந்தான்
சுரேசும் எழுந்தான்.
ரகுநாதன் பணங்கட்டினான்.
சுரேசும் அவனுடன் வெளியேறினான்.
மணி 9.30.
கடையிலிருந்தவர்கள் நாணயக்காரா உட்பட எல்லோரும் இவர்களையே பார்த்தார்கள்.
இரண்டு மினிபஸ்கள்,.. ஒரு 'கொண்டா'... மோட்ட பைக் இவர்களைத் தாண்டிச் சென்றது.
தெருவைக் 'குறொஸ்' செய்தார்கள்.
சுரேசை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்துவிட்டு ரகுநாதன் 'குட் நைற்' என்றான்.
சுரேஸ் பதிலுக்கு ஒன்றும் சொல்லவில்லை.
ரகு அதை எதிர்பார்க்கவுமில்லை.
வெள்ளவத்தை போகும் பாதையில் சுரேஸ் நடக்க... ரகு எதிர்த்திசையில் நடக்கத் தொடங்கினான்.

இவனது 'பஸ் கோல்ற்றுக்கு' இன்னும் 100 யார் நடக்க வேணும். இதில பக்கத்திலயே என்ர ரூமும் கட்டிலும் இருந்தா எவ்வளவு நல்லாயிருக்கும் என்டு யோசிச்சான். தன்னாலை ஒரு பூதமாகேலாதென்டும், தன்னாலை அற்புத விளக்கைத் தேடி எடுத்து அதை உரஞ்சி ஒரு பூதத்தைக் கூப்பிட்டு ஒரு மாளிகையும் கட்டிலும் கொண்டுவா என்று சொல்லுறளவுக்கு வல்லமை இல்லை என்பதை நினைக்க அவனுக்குக் கவலை கூடிக் கொண்டுவந்தது.

● ● ● ●

எங்கேயோ ஒரு 'பாரி'ல் சாராயம் குடித்துவிட்டுத் தள்ளாடித் தள்ளாடி ஒரு சராசரி மத்தியதரவர்க்கத்துச் சிங்களக் குடிமகன், ஒரு 'சிவில் சேவன்ற்' வந்துகொண்டிருந்தார்.

"நீ இந்த உலகத்திலை எதை நம்புறாய் ?" என அவரிடம் கேட்கலாமா என்று ரகுநாதன் யோசித்தான்.

(தொடரும்)

அவர் :நாய் சாப்பிடும் பிஸ்கட் ஒரு கிலோ தாருங்கள்

இவர் :இங்கு சாப்பிடவா ? வீட்டுக்குக் கொண்டு செல்லவா?

அவர் : .......?

ஆனந்த்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






* 3000க்கும் அதிகமான சொற்கள்

* எளிமைப்படுத்தப்பட்ட இலக்கணம்

* இலகு தமிழ்

* அருகிலுள்ள புத்தகசாலைகளுடனோ எங்களுடனோ ( FRIUNDERVISNINGENS FORLAG .A. S. TOLLBU GATEN 11, 0152, OSLO 1 தொலைபேசி இலக்கம் 02/ 331107) தொடர்பு கொள்ளுங்கள்.

* விலை 90 குரோணர்கள் மட்டுமே



# இலங்கையும், சர்வதேச மன்னிப்புச் சபையும்

சர்வதேச மன்னிப்புச்சபை (Amnesty International) AUG. 17ம் திகதி, அதிகரித்து வரும் மனித உரிமைமீறல்களை உடன் நிறுத்துமாறு இலங்கை அரசிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது. ஆனிமாதத்தில் அவசரகாலச்சட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டபின் அரச படையினரால் நடத்தப்படும் கொலைகள், சித்திரவதைகள், "கைதானோர் காணுதுபோதல்", விசாரணையின்றித் தடுத்துவைக்கப்படல் போன்றவற்றை உடன் நிறுத்த மன்னிப்புச்சபை கோரியுள்ளது.

(தணிக்கை காரணமாக) கொலை நிகழ்ந்த சூழல் தெரிவிக்கப்படாவிடினும் மக்கள் விடுதலை முன்னனி (J V P) சந்தேகநபர்கள் பலர் விசாரணையின்றிக் கொல்லப்பட்டதை சபை பதிவுசெய்துள்ளது.

படையினர் வீடுகளைச் சோதனையிட்டு இளைஞர்களைக் கைதுசெய்கிறார்கள். இளைஞர்களின் உடல்கள் அல்லது முண்டங்கள் வீதியோரங்களிலோ, ரயர்களுடன் எரிக்கப்பட்டோ, ஆறுகளில் வீசப்பட்டோ காணப்படுகின்றன.

---

**சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை** **மனித உரிமை மீறல்களை நிறுத்துக**

---

சர்வதேசரீதியில் தொழிற்பட்டுவரும் சபையின் கூற்றுப்படி இலங்கையின் தென்பகுதியில் கடந்த இருமாதங்களில் அரசபடையினரால், பரந்தளவில் நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், குறிப்பாக ஆடி 6ம் திகதி முதல் 24ம் திகதி வரை

சிவிலுடையில் இயங்கும் துணைப்படைகள் (பச்சைப்புலி, கறுப்புப்பூனை) இலக்கத்தகடற்ற கார்கள் போன்றவையும் விசாரணையற்ற கொலைகளிலும், சித்திரவதைகளிலும், "காணுது போதலிலும்" சம்பந்தப்பட்டுள்ளன.

அவசரகாலச் சட்டவிதிகளின்கீழ் சடலங்களை, மரணவிசாரணையின்றியே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விசாரணையற்ற படுகொலைகளால் பாதிப்புறுவோரின் சடலங்களை மறைக்க இச் சட்டம் வழிவகுப்பதால் அரசபடைகள் படுகொலைகளைத் தொடர இது ஊக்கமளிக்கும் எனச் சபை கருதுகிறது. பொலிசார் புலன்விசாரணை புரியும் சந்தர்ப்பத்தை இச் சட்டம் நீக்குவதால், படையினர் சட்டம் பற்றிய பயமின்றி நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்புள்ளதாகச் சபை கருதுகிறது.

நூற்றுக் கணக்கான படையினரதும், பொதுமக்களதும் மரணத்துக்கும் ஜே.வி.பி. காரணமாயுள்ளது. ஆயுதத் தாக்குதலை எதிர்ப்பதற்கு அரசு விசேட நடவடிக்கைகளை மேற்கொள்வதவசியம் எனச் சபை கருதும் போதும் இந் நடவடிக்கைகள் சர்வதேச மனிதஉரிமை ஒப்பந்தத்திற்கு இயைபுடையதாக அமைய வேண்டும் என வலியுறுத்துகிறது.

ஆனிமாத நடுப்பகுதிக்குப்பின் வடக்கு, கிழக்குப் பகுதியிலிருந்து சபைக்குக் கிடைத்த தகவல்களின்படி நூற்றுக்கணக்கான பொதுமக்கள், பெரும்பாலும் இளைஞர்கள், மாகாணசபை அதிகாரத்திலுள்ள ஈ.பி. ஆர்.எல்.எப். ,ஈ.என்.டி.எல்.எப். அமைப்புக்களால் கடத்தப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இளைஞர்கள் (சில பெண்கள் உட்பட) இந்திய அமைதிப்படையுடன் இணைந்து பணிபுரியும் மக்கள் தொண்டர் படையில் இணையுமாறு பலவந்தப்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. இவ்வாறான தடுப்புக்காவலுக்குச் சட்டத்தில் எதுவித வழியும் இல்லாத போதும், 4000பேர் வரை இவ்வாறு கொண்டு செல்லப்பட்டு பலவந்தப் பயிற்சிக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். சிலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தப்பியோடிய ஏனையோர் கொல்லப் பட்டு அல்லது பழிவாங்கல் நடவடிக்கையாக உறவினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தப்பியோடிய ஒருவரின் தந்தை மட்டக்களப்பில் ஈ.என்.டி.எல்.எப். ஆல் அழைத்துச் செல்லப்பட்டதையும், தப்பியோடிய வேறொருவர் ஈ.பி.ஆர்.எல்.எப்.ஆல் திரும்பவும் கைதாகிப் பகிரங்மாக மரணதண்டனை வழங்கப்பட்டதையும் பற்றிச் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் ஆவணி முற்பகுதியில் இந்தியப் படையினரால் ஆயுதம் தரிக்காத பொதுமக்கள் கொல்லப்பட்டது பற்றி முழு விசாரணை நடத்தப்படவேண்டும் எனச் சபை கோருகிறது.

ஆவணி மாதம் இரண்டாம் திகதி விடுதலைப் புலிகளால் வல்வெட்டித்துறையில் வைத்து இந்தியப் படையினர் தாக்கப்பட்டு ஆறு படையினர் பலியான சம்பவத்திற்குப் பழிவாங்கல் நடவடிக்கையாக ஆறு பெண்கள், ஏழு சிறுவர்கள் உட்பட ஐம்பத்தொருவர் கொல்லப்பட்டனர்.

பலர் வீட்டிலிருந்து வெளியே இழுத்து முதுகில் சுடப்பட்டனர். ஏனையோர் சுவர்களுக்கெதிராக நிறுத்தப்பட்டு சுடப்பட்டனர். நூற்றுக்கு மேற்பட்ட வீடுகளும் பலகடைகளும், வாகனங்களும், மீன்பிடி வள்ளங்களும் எரிக்கப்பட்டன. துப்பாக்கிச் சூட்டினிடையே அகப்பட்டு 24 பேர் பலியானதாக இந்திய அதிகாரிகள் அறிவித்தபோதும் நேரடிச் சாட்சிகளும், சுயாதீன வட்டாரங்களும் இது சரியான செய்தியல்ல என மறுத்துள்ளன.

இலங்கையின் வெளிநாட்டமைச்சர் இந்தியா மரணங்கள்பற்றி விசாரணை நடத்தும் என அறிவித்துள்ளார். இவ்வாறான விசாரணைகள் சுதந்திரமானவையாகவும், நடுநிலையானதாகவும் இருக்கவேண்டும் எனவும் சபை வலியுறுத்துகிறது. இந்தியப் பிரதமருக்குச் சபை அனுப்பியுள்ள அவசரச் செய்தியில் ஆயுதம் தாங்கிய எதிர்க் குழுக்களால் இந்தியப் படை தாக்கப்படுகையில் அதற்கு முழுப் பலத்தையும் பாவிக்கவேண்டிய நிலை ஏற்படுவதைப் புரிந்துகொள்ளும் அதே வேளை, முன்பு இவ்வாறான சந்தர்ப்பங்களில் இந்தியப் படை "கட்டுப்பாட்டுடன்" நடந்ததை சபை நினைவுபடுத்துகிறது. எவ்வாறெனினும் இவ்வாறான கொலைகள்" அரசாங்கங்கள் அடிப்படை மனித உரிமைகளை மதிக்கவும், காக்கவும் கொண்டிருக்கும் கடமையிலிருந்து மீறுவதை மன்னிக்காது" எனச் சபை கூறியுள்ளது●

(சர்வதேச மன்னிப்புச் சபையின் செய்திப் பிரிவு ஆவணி 17ம் திகதி வெளியிட்ட செய்தி அறிக்கையின் தமிழாக்கம், தொடர்புகள் Sarah Lee, Amnesty's British Section Press Office, தொலைபேசி 01 - 278 - 0000 )



## வரும் குளிர்காலம்



"வருகுது வருகுது கடுங்குளிர் வருகுது"இதைக் கேட்டதும் ஏதோ குடுகுடுப்பைக்காரன் நம்மூர் தெருக்களில் ஆருடம் கூறுவதாக நினைக்கவேண்டாம்.இந்தக் குளிர்காலம் மிகக் கடுமையாகவும்,அதிக 'ஸ்னோ'வுடன் குளிரும் கடுமையாக இருக்கும் எனவும் இந் நாட்டவர் நம்புகிறார்கள்.

இம் முறை "ரொங்னபார்" (Rongne Baer )பழம் அதிகளவில் கொத்துக் கொத்தாகக் காய்த்து மரங்களை மறைத்துக் காணப்படுவதே குளிர் அதிகம் என நம்பப்படக் காரணம்.

ரொங்னபார் பழம் அதிகம் காய்த்துக் காணப்பட்டால் குளிர்காலம் கூடும் என்ற நோர்வே மக்களின் நம்பிக்கை மெய்க்குமா பொய்க்குமா என்பது இன்னும் சில வாரங்களில் புரிந்துவிடும்.எதற்கும் சுமக்கமுடியாத உடைச்சுமைகளைச் சுமக்க ஆயத்தமாகுங்கள்!

கே.ரங்கன்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாற்சந்தி

ஆசிரியர்,
சுவடுகள்,
ஒஸ்லோ.

கடந்த சில சுவடுகள் படித்தேன். அதுபற்றித் தங்களுக்கு அறியத் தருவது யாதெனில்;

குறுக்கெழுத்துப்போட்டி இல.6 உள்ள சுவடுகளின் 17ஆம் பக்கத்திலுள்ள ந.பார்த்திபனின் "நவீன அகதிகள்" என்ற 19.03.1989இல் வீரகேசரியில் வெளிவந்த கற்பனைப் பிரசுரத்தினை நேரடியாக வீரகேசரியில் வாசிக்க முடியாவிடினும் சுவடுகள் மூலம் படித்தேன். இது சார்பாக நான் தங்கள் நடவடிக்கைகளுக்கும் பார்த்திபனுக்கும் எழுதுவது:

எந்தவொரு விடயத்தையும் சீர்தூக்கிப்பார்த்தே எழுத, வெளியிட, செயற்படவேண்டும். அதிலும் செயற்பாடென்பதைவிட எழுத்தென்பதில் கட்டுப்பாடு கடைப்பிடிக்கப்படுவது முக்கியமானது என்பதற்கமைய திரு.ந.பார்த்திபன் இக்கற்பனையை அவிழ்த்திருக்கலாம். மாறுக ஒருசாரார் மீதுமட்டும் குறை, குற்றம். மேலும் சொல்வதாயின் பொறுமைத்தனத்தைச் சுமத்தியுள்ளார் என்பது கண்கூடாகிறது. இவர் இந்த அகதிகளுக்கு வேண்டுமானால் ஒழுக்கச் செயற்பாடுகளை எழுதியிருக்கலாம்;

ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும். இதில் நான் இரத்தினச் சுருக்கமாகத் தருவது: "அகதி" என்ற சொல்லுக்கு சில பகுப்புகளுண்டு. பலர் தம்மைத்தாமே அகதிகளாக்கி ஐரோப்பியநாடுகளுக்கு வசதிதேடி வந்தோர். சிலர் மற்ருேரால் அகதியாகத் தள்ளப்பட்டு வந்தோர். இந்த இரண்டாவது வகையைச் சார்ந்தோருக்கு பார்த்திபனின் கற்பனைக் குற்றச்சாட்டுகள் தவறு புரியாதவனுக்குத் தண்டனை வழங்குவதுபோன்றுள்ளது. உண்மையில் தரமற்ற கற்பனைவளம் என்று நேரடியாகத் தவறு கூகின்றேன்.

"அவர் தம் தவறுகளைக் களைந்தால் மகிழ்வுதரும்".

சுவடுகள்பற்றி: இதை நான் எத்தனையாவது பதிப்பிதழ் என்று தேடிப்பிடிக்க பலபக்கங்களைத் தேடியும்கிடைக்காமல் குறுக்கெழுத்துப் போட்டிப் பக்கத்தைக் கண்டு அதனையே பார்த்தீபனின் கட்டறுத்த கற்பனையைத் தங்களுக்கு விளக்க எடுத்த யுக்தியாகும். ஏன் சுவடுகளுக்கு வெளியீட்டுத் திகதியோ இதழின் தொடர் இலக்கமோ இடப்பட்டிருக்கவில்லை. நீங்கள் தமிழின்கண் தொண்டாற்றும் இவ்வெளியீட்டை நான் மனமார்ந்து வாழ்த்துகின்றேன். எனினும் துன்னப்பாகத் தெரியும் குறைகளைத் திருத்தி மேற்கொண்டால் மேலும் சுவடுகள் மேன்மைக்கான சுவடுகளாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

நன்றி!

- வாசகன்
எம்.சி.லோகநாதன்
(கூல்ஸ்தப்ரா
டென்மார்க்)



# ஆவணி மாதமும் மூன்று தமிழ் நிகழ்ச்சிகளும்

தேசிய இன எழுச்சி பெற்ற காலம் தொட்டு எமது பிரதேசத்தில் பரவலாகக் கலை இலக்கியங்களும் வளர்ச்சி பெற்று வந்துள்ளன. இந் நிலையில் சூழ்நிலை காரணமாய் நாட்டைவிட்டு வெளியேறி ஐரோப்பிய மண்ணில் காலம் கழித்துவரும் எம்மவர் மத்தியிலும் இவ் வளர்ச்சி பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதை அண்மைக் கால நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன.

ஆவணி மாதம் ஒஸ்லோவில் நடந்து முடிந்த மூன்று நிகழ்ச்சிகளும் இவற்றுக்குச் சான்று பகன்றன. கடந்த காலங்களில் இங்கு கலைத்துவம் குறைந்த படைப்புகளே பெரும்பாலும் அமைந்திருந்த போதும் தற்போது நிலை ஓரளவு மாறத் தொடங்கியுள்ளது.இது எமது மக்கள் மத்தியில் ஓரளவு கலை பற்றிய விழிப்பை ஏற்படுத்தியுள்ளது எனலாம். சமகாலப் பிரச்சனைகளைப் பிரதிபலிக்கும் படைப்புகள் வெளிவரத் தொடங்கியுள்ள இவ் வேளை நாவல், சிறுகதை போன்றவற்றைவிட நாடகங்களும்,கவிதைகளும் மக்களைப் பெருமளவு சென்றடைகின்றன.

இங்கு ஆவணி மாதம் நடந்த நிகழ்ச்சிகள் தொடர்பாகச் சிறிது ஆராய்வது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பயனுடையதாயிருக்கும். கலை இலக்கிய வடிவங்கள் யாவும் எமது பிரச்சனை பற்றித் தெளிவான விளக்கத்தை மக்களுக்கு ஊட்டத்தக்க வகையில அமைவது அவசியம். மக்கள் பார்வையாளர் என்ற நிலைக்கு மாறவும் கலை இலக்கிய வடிவங்கள் வழிசமைக்க வேண்டும்.நம்மிடை நிலவும் சீரழிவுகளையும் இனம்காட்டுபவையாகவும், விமர்சனங்களை முன்வைப்பவையாகவும் அவை அமைவது அவசியம்.

ஆவணி ஐந்தாம் திகதி விடுதலைப்புலிகள் அமைப்பினர் நடத்திய நிகழ்ச்சி ஒழுங்கமைக்கப்பட்ட விதம் திருப்தியளித்தது. இசை நிகழ்ச்சி மிக நன்ருக அமைக்கப்பட்டிருந்தது. பாடியோரும் இசை அமைத்தவர்களும் மிகுந்த பொறுப்புடன் உழைத்திருந்தமை நிகழ்ச்சியைச் சிறப்பாக்கியிருந்தன. நாடக வடிவமும் நன்ருக அமைக்கப்பட்டிந்தது, எனினும் நாடக மூலம் தமது அமைப்பின் பிரசாரத்தை மேற்கொண்டார்களேயன்றி, தற்போதைய சூழல் பற்றிய விளக்கமோ தேவையோ வெளிக் கொணரப்படவில்லை. தமது அமைப்பின் நிகழ்வுகள் மேடைக்கு வடிவமைக்கப்பட்ட விதத்தில், வேறு அமைப்புகளைச் சாடும் இவர்களது பாணி விசிலடிகளையும், கைதட்டல்களையும் பெற்றுத் தந்தன. எனினும் தம் அமைப்பின் சார்பில் மக்களுக்குக் கொடுக்க வேண்டிய கருத்துகளைக் கொடுக்கவில்லை. கருத்துத் தெளிவின்மையால் ஒரு நல்ல முயற்சி கலைப்படைப்பாக ஆகாது போய்விடும் அபாயம் இந் நாடகத்தில் தெரிந்தது.

பன்னிரண்டாம் திகதி தமிழ்ச் சங்கத்தின் பத்தாண்டு நிறைவையொட்டி நடந்த நிகழ்ச்சியில் "சக்தி பிறக்குது" நாடகம் பலரது பாராட்டைப் பெற்றது. அத்துடன் கடந்த காலங்களில் நோர்வேயில் தமிழர்களிடையே நாடகம் பற்றி இருந்திருக்கக் கூடிய எண்ணக் கருவைச் சற்றே தகர்த்திருக்கிறது.

1986ல் கலாநிதி மௌனகுரு அவர்களால் எழுதி நெறிப்படுத்தப்பட்டு சுமார் நான்கு தடவை மேடையேறியது. "பெண் விடுதலை"யைக் கருவாகக் கொண்ட இந்த நாடகத்தின் உள்ளடக்கம் தொடர்பாகவும், "பெண் விடுதலை" தொடர்பாக நாடக ஆசிரியரின் பார்வை பற்றி எனக்கு மிக்க கருத்து முரண்பாடு உண்டு. இது ஒரு த்னி விமர்சனத்துக்குரிய விடயம் என்பதால் அதை இங்கு தவிர்த்து, நாடகத்தின் வடிவமைப்புப் பற்றி நோக்கிஞல் இது ஒரு பிரமாண்டமான தயாரிப்பாக இருந்ததுடன் மேடையே ஒரு வீடாக, தொழிற்சாலையாக, வீதியாக, கிராமமாக, பிரதேசமாகப் பாவிக்கப்பட்டுள்ள விதம் நன்ருக இருந்தது. நடிகர்கள் குறிப்பாக குடும்பப் பெண்ணும், மலையகத் தோட்டத் தொழிலாளப் பெண்ணும் தமது பாத்திரத்தை நன்குணர்ந்து அதற்கேற்ப அங்க அசைவுகளுடன் நடித்தமை மிகவும் பாராட்டப்பட வேண்டியதொன்று. அதே வேளை கல்லூரிப் பெண்ணுக நடித்தவர் முகத்தில் இன்னும் பாவனையைக் காட்டி நடித்திருக்கலாம்.

எடுத்துரைஞர்கள் மூவரும் நன்கு நடித்திருந்தபோதும் சில இடங்களில் தமது இயல்பான நடிப்பைக் கைவிட்டு மிகையான நடிப்பை வெளிப்படுத்தியிருந்தனர். இது தவிர்க்கப்படல் வேண்டும். மேடைப் பரப்பினைவிட்டு இவர்கள் அடிக்கடி வெளியே சென்று நடித்தமையால் இவர்களது முகபாவனை பல தடவைகள் வெளியே தெரியாது போய்விட்டது. மேடையில் ஆண் பாத்திரம் ஏற்று நடித்தோர் தமது நடிப்பை நன்கு வெளிப்படுத்தியிருந்தனர்.கணவனுக நடித்தவர் தன் நடிப்பை செய்கைகள் மூலம் வெளிப்படுத்தியிருந்தால் பாத்திரம் இடைவெளியற்று இருந்திருக்கும். குறிப்பாக மனைவி தன் நிலையை எடுத்துக் கூறும் பகுதியில் இது அவசியம்.

மேலும் இந் நாடகம் யாழ்நகரில் மேடையேறியதற்கு மாருக எமது சமூகத்தில் உள்ள சீதனக் கொடுமையை வெளிப்படுத்தும் 'நிகழ்த்திக் காட்டல்' மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.இப் பகுதி நாடகத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டிருந்தபோதும் ஆரம்பத்திலேயே இதுபற்றி நெறியாளர் சர்வேந்திரா பார்வையாளருக்கு இதுபற்றி விளக்கமளித்திருந்தமையால் அவர்களுக்குப் புரிந்துகொள்ளல் சிரமமாயிருக்கவில்லை.

இந் நாடகத்தின் பாடல்களும், இசையமைப்பும் நன்ருக இருந்தன. சில இடங்களில் பாத்திரங்களுக்குப் பின்னணிக் குரலில் பாடிய அதே வேளை, சில இடங்களில் பாத்திரங்கள் தாமே பாடியது குரல் வடிவத்தில் சிறிது தொய்வை ஏற்படுத்தியது.

மொத்தத்தில் இந் நாடகம் ஆரம்பம் முதல் இறுதிவரை மேடை முழுவதிலும் ஒரு கூட்டு முயற்சியை வெளிப்படுத்தியிருந்தது. அனேகமாக எல்லாப் பாத்திரங்களும் மனதில் பதிந்துவிடக் கூடியனவாக இருந்தன. இதை நாடகம் பார்த்த பலரின் வாய்களில் அடுத்த நாட்களில் ஒலித்த பாடல்கள், வசனங்கள் மூலம் அறியக் கூடியதாயிருந்தது.

இவ்வாருன வடிவங்களில் நாடகங்கள் தொடர்ந்து வெளிவர இது ஒரு


உங்களுக்குத்
தேவையான சகல புதிய,
பழைய பாடல்கள்
கொண்ட

AUDIO CASSETE - 27Kr.
DISK
ஆகியவற்றைப்
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

செல்வன்
தொலைபேசி இல. 357368






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னோடியான, சிறப்பான முயற்சியாகும். இந்நாடகம் மேடையேறிய நேரம் தொட்டு இறுதிவரை ஒரு சிலரைத் தவிர பார்வையாளர்கள் மிக அமைதியாகவும், ஆவலுடனும் இருந்து பார்த்தது இந் நாடகத்துக்கு கிடைத்த வெற்றியாகும். இத்தருணத்தில் இந் நிகழ்ச்சியின் ஏனைய நிகழ்வுகள், இந் நாடக வெளிப்பாட்டின் தன்மைக்கு மாறாக அமைந்திருந்தமை குறிப்பிடப்பட வேண்டியது. நாம் கலை வெளிப்பாடுகளைச் சினிமாப் பாணியில் அமைக்க முற்படுவதை இனி வரும் காலங்களிலாது கைவிட எத்தனிக்க வேண்டும்.

பத்தொன்பதாம் திகதி தமிழ் நோர்வே இணைவு கூடத்தினர் நடாத்திய 'கலாசார இரவு' என்ற நிகழ்ச்சியினை நோக்குமிடத்து இந் நிகழ்ச்சியில் 'சங்கீதக் கனவுகள்' மற்றும் நோர்வீஜிய நாட்டவர் ஒருவரின் புல்லாங்குழல் இசை ஆகியவை தவிர ஏனையவை ஒன்றும் கலாசார நிகழ்வாக அமையவில்லை. இந் நிகழ்ச்சி ஒரு நிதி வசூலிக்கும் நிகழ்வாகவும், நமது நாட்டு கலைஞர்களை கௌரவிக்கும் ஒரு நிகழ்ச்சியாகவுமே அமைந்திருந்தது. இந்நிகழ்ச்சியின் தலையங்கத்திற்குப் பொருத்தமில்லாது இந் நிகழ்ச்சி அமைந்திருந்தது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.

'சங்கீதக் கனவுகள்' என்ற மெல்லிசை நிகழ்ச்சி சிறப்பாக அமைந்ததோடு எல்லோரையும் கவர்ந்தது. பாடல்கள் வெகு சிறப்பாக எழுதப்பட்டிருந்ததுடன், எமது இருப்பையும், தாய்நாட்டையும் ஒருகணம் அசைபோட வைத்தன. பாடகர்கள் சிலர் நிகழ்ச்சியில் தமது குரல்வளத்தை இழந்ததுபற்றி இனிமேல் கவனம் எடுப்பது அவசியம். இசையமைப்பு சினிமாப் பாணியில் இல்லாது சிறப்பாய் இருந்தது. ஒலியமைப்பு சில இடங்களில் இசையை ரசிக்க முடியாது தடை விதித்ததால் பார்வையாளர்கள் முழுமையாக இசையில் ஒன்ற முடியவில்லை. பாடல்களுக்கு மெட்டமைத்த விதம் குறிப்பிடப்பட வேண்டியது. ஆனால் ஒரு பாடலில் சினிமாப் பாடல் மெட்டுப் பாவிக்கப்பட்டது குறையாகத் தெரிந்தது. அனேக பாடல்களில் 'ஹம்மிங்' பாவிக்கப்பட்டமை தவிர்க்கப்பட்டிருக்கலாம். இந் நிகழ்ச்சி நோர்வேயில் வாழும் கவிஞர்கள், இசையமைப்பாளர்கள், பாடகர்கள் அனைவரதும் கூட்டு முயற்சியாக வெளிப்பட்டதுடன் எம்மிடையே உள்ள தென்னிந்திய ரசனைக்கு ஈடாக எமது சொந்த இசை வடிவத்தை வெளிப்படுத்தியது சிறப்பான அம்சமாகும்.

தொடர்ந்து இடம்பெற்ற நோர்வேஜிய நாட்டவரது இசை சிறப்பாக அமைந்த போதும் பார்வையாளர்கள் இதைப் பாராட்டத் தவறியதுடன் அந்தக் கலைஞரைப் புண்படுத்தும் விதத்தில் நடந்துகொண்டிருந்தது கண்டிக்கப்பட வேண்டியது. கலை இலக்கியங்களூடாகவே தேசிய இனங்களுக்கிடையிலான உறவை வளர்க்க முடியும் என்பதை நாம் மறக்கக் கூடாது.

இந் நிகழ்ச்சியில் இலங்கை வானொலி, தொலைக்காட்சிக் கலைஞர்கள் பங்கேற்றிருந்தனர். இவை யாவும் காத்திரமான வெளிப்பாடுகள் என்று கூறமுடியாது. எனினும், தென்னிந்தியக் கலைஞர்களைக் கௌரவித்துப் பணத்தை அள்ளிக் கொடுத்து மகிழும் எம்மவர் மத்தியில் எம் நாட்டுக் கலைஞர்களைக் கௌரவித்தது பாராட்டப்பட வேண்டியது. மொத்தத்தில் இவ் வருடம் நோர்வேயில் கலை நிகழ்ச்சிகள் யாவும் ஓரளவு சிறப்பாகவும் 'மரபுகளை' மீறியும் வெளிப்பட்டிருந்தன. இவை எம்மவர் மத்தியில் உள்ள முரண்பாடுகளுக்கு அப்பால் ஒரு தேசிய இணைப்பை ஏற்படுத்தியிருந்ததுடன் எதிர்காலம் பற்றி நம்பிக்கை ஊட்டுகின்றன. தொடர்ந்து இவ்வாறான நிகழ்ச்சிகள் அவசியம் இடம்பெறல் வேண்டும். எதிர்கால நிகழ்ச்சிகள் சிந்தனையைத் தூண்டுவதுடன் எமது மண்ணின் விம்பங்களாயும் எமது கலை வடிவங்களைப் பேணும் வகையிலும் அவற்றுக்கு உயிர்ப்பூட்டும் வகையிலும் அமைவது அவசியம்.

ஜீவன்

# நவராத்திரியும் நாங்களும்.

ஒன்பது ராத்திரிகளின்
விரதம் முடித்தும்
இரவொன்றின் இடையில்
திடுக்கிட்டெழுந்தேன்

'எங்கு தொலைத்தேன்
என் மகிழ்வை..?

தேவி!
காலமும் உனை வேண்ட
நல்ல பொறியியலறிவுதந்தாய்,
வானுயர்ந்தன கட்டிடங்கள்.
நல்ல மருத்துவ அறிவுதந்தாய்
நோய்களைக்கொன்றோம்.
நல்ல மொழி அறிவு தந்தாய்
இலக்கியம் ஆயிரம் சுவைத்தோம்.
நல்ல ஆயுத அறிவு தந்தாய்
கொலைக் கருவிகள் புரிந்தோம்.

தேவி!
யாவும் கிட்டியும்
நெஞ்சினிலேன் வெறுமை?
சொல்லி விடு தாயே!

திடுக்கிட்டெழுந்து
திரும்பிப் பார்க்கையில்
பூஜை முடித்து வெகுநேரமாயிற்று
சுற்றிலும் நிறைந்த
சோகமும் ஏன்?

புரிந்தது தேவி,
நாம் மனிதநேயம்
தொலைத்து நெடுநாளாயிற்றென்று.

தேவி
நல்ல மனிதநேயம் படைக்க
நல் அரசியல் அருளிவிடு.

புனிதா. ஒஸ்லோ.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






வாசகர் ஒருவர் சில மிளகாய்த்தூள் துணுக்குகளை அனுப்பி அவற்றை பிரசுரிக்காமல் விட்டால் எம்மீது மிளகாய்த்தூள் 'தாக்குதல்' நடத்தப்படும் என எழுதியிருந்தார். சூழ்நிலை காரணமாக இவற்றை பிரசுரிக்கிறோம்.

(பெயர் குறிப்பிட விரும்பாத கற்பனையாளர்)




* நேற்று ஒஸ்லோ விமான நிலையத்தில் வந்திறங்கிய இரு தமிழ் வாலிபர்கள் பொலிசாரால் கைதாகினர். இவர்கள் வைத்திருந்த ஒரு கிலோ மிளகாய்த் தூள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டது. இவர்கள் ஏன் இங்கு மிளகாய்த் தூள் கொண்டுவந்தார்கள் என்பதுபற்றிப் பொலிசார் விசாரித்து வருகின்றனர்.

'மிளகாய்த் தூள்' ஏவுகணைகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் ஒப்பந்தமொன்றில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், இலங்கை ஜனாதிபதி பிரேமதாசவும் நேற்றுக் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தம் உலக நாடுகளின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

* தொலைபேசித் தகவல் ஒன்றைத் தொடர்ந்து ஒஸ்லோ புறநகர்ப் பகுதியில் வீடொன்றை நேற்றுச் சோதனையிட்ட பொலிசார் 300 கிராம் சக்தி வாய்ந்த தனி மிளகாய்த் தூள் அங்கிருக்கக் கண்டுபிடித்தனர். இந்த மிளகாய்த் தூள் மூவரின் தேவைக்குப் போதுமானது எனத் தெரிவித்த பொலிசார் வெளிநாட்டவர் ஒருவரைக் கைது செய்தனர். நோர்வேயில் மிளகாய்த் தூள் தடை செய்யப்பட்ட பின்னர் இதுவரை 68 பேர் மிளகாய்த் தூளுடன் கைதாகியுள்ளனர்.

இலங்கையிலிருந்து அரசியல் தஞ்சம் கோரி வருவோரைத் திருப்பி அனுப்புவதாக நோர்வே அரசு முடிவு செய்துள்ளது. திருப்பி அனுப்பப்படும் ஒவ்வொருவருக்கும் அவர்களின் தற்காப்புக்காக ஒரு கிலோ மிளகாய்த் தூளும் கொடுத்தனுப்புவது பற்றிய தீர்மானத்தைப் பாராளுமன்றம் ஏகமனதாக அங்கீகரித்தது.

தென்னுபிரிக்காவுக்கு சட்ட விரோதமான முறையில் இலங்கை மிளகாய்த் தூள் ஏற்றுமதி செய்வது பற்றி உறுதியான தகவல் தனக்குத் தெரியும் என இந்தியா குற்றம் சாட்டியுள்ளது. இக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என இலங்கை வெளிநாட்டமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ளது.

'மிளகாய்த் தூள்' போர் ஆயுதமாகப் பாவிக்கத் தொடங்கிய நாள் முதல் இலங்கையோ, இந்தியாவோ தமது மொத்த மிளகாய்த் தூள் கையிருப்பை வெளியிடாது ஏமாற்றி வருகின்றன என ஐ.நா.சபையில் அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. இலங்கையில் மிக நவீன, ஆபத்து வாய்ந்த மிளகாய் இனம் ஒன்று அபிவிருத்தி செய்யப்படுவதாக அமெரிக்கப் பிரதிநிதி குற்றம் சாட்டினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


* உங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை ஒரே இடத்தில் வாங்கவும்,

* நகரின் மத்தியிலேயே உங்கள் பொருட் கொள்வனவைச் செய்து முடிக்கவும்,

* உங்கள் உணவுச் செலவையும், சிரமத்தையும் பெருமளவில் குறைக்கவும்



* நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் தபால் மூலம் உங்களுக்குத் தேவையான பொருட்களை உடன் அனுப்பிவைக்கிறோம். தொலைபேசி மூலமோ, கடித மூலமோ எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். மிகுதியை நாங்கள் செய்கிறோம்.

INTER TRADERS
STENERS GATE 18
( OSLO CITY பின்புறம்)
0184 0184 OSLO 1
தொலைபேசி இலக்கம்: 02/ 176218






## பாதி உலகம்

## பெண்கள் பகுதி

சுவடுகள் 12வது இதழில் "லேகா" எழுதிய 'நம்பிக் கெட்டவர்கள்' சிறுகதை ஏற்படுத்திய தாக்கமே இதை எழுதத் தூண்டியுள்ளது.

பொதுப் பணியில் ஈடுபட்டுவரும் ரேகாவுக்கும்; அப் பணியின் வளர்ச்சிக்கு உதவிய பிரேமுக்குமிடையில் காதல் மலர்கிறது. ஓரிரு வருடங்களின் பின்னர், இருவருக்குமிடையில் பூசல் ஏற்படுகிறது. இதனுல் ரேகா எல்லாம் முடிந்துவிட்டது , இனி என்ன இருக்கிறது என்று புலம்புகிருள். இனி இவனுடன் வாழ முடியாது என்ற முடிவுக்கு வந்தவளாக ரேகா ஆண்கள் திருந்தமாட்டார்களா என்ற ஏக்கத்துடன், தாலி, குங்குமம் இல்லாத வாழ்க்கையைத் தொடர எண்ணுகிருள். ஆனுல், இந்த வாழ்க்கையானது, எண்டைக்காவது ஒரு நல்லவன், நம்பிக்கையானவன், ஆத்மாவை நேசிக்கிறவன் கிடைக்கும்வரை தொடர்கிறது... என்று கதை முடிகிறது. இக் கதையை ஒரு கற்பனைக் கதையாகப் பார்க்கமுடியாது. எத்தனையோ பெண்களின் வாழ்க்கையில் நடந்து முடிந்த, நடந்துகொண்டிருக்கும், நடக்கப்போகும் பெண் அடிமைத்தனத்தின் நுண்ணிய வெளிப்பாடுகளைக் கொண்ட யதார்த்த வாழ்வின் விம்பமே இதுவாகும். சரி, இனி விசயத்துக்கு வருவோம்.

பொதுப் பணியில் ஈடுபட்ட ரேகா தனது பணியில் அக்கறை காட்டிய பிரேம் தனது கருத்துக்கு என்றும் ஆதரவாகவும், ஊக்கமளிப்பவனுமாகத் திகழ்வான் என்ற நம்பிக்கையின் மனப் போக்கில் காதல் கொள்கிருள். அதாவது, சற்று

# நம்பிக் கெட்டவர்களும் பெண் விடுதலையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## புரிந்தும் புரியாதவளாக...

நான் பிறந்தபோது
"அது பெட்டைதான்"
- சோர்ந்து போயினர்.

நான் வளர்ந்தபோது
"பெரும் பொறுப்பு"
- பெருமூச்சு விட்டனர்.

நான் கரைசேர்ந்தபோது
"அப்பனே புண்ணியம்"
- நிம்மதி அடைந்தனர்.

நான் உண்டாகாதபோது
"மலட்டுக் கழுதை"
- வார்த்தைகளால் சுட்டனர்.

நான் பறிகொடுத்தபோது
"விழுங்கிப்போட்டாள் விதவை"
- சபித்துத் தீர்த்தனர்.

நான் எனை விற்றபோது
"துணிஞ்ச தேவடியாள்"
- திட்டித் தொலைத்தனர்.

நான் தலையைக் குனிந்தேன்;
நன்கு அழுதேன்;
சிரிப்பை விட்டேன்;
பேசுவதை மறந்தேன்
"பாவம் நல்லா நொந்துபோனுள்"
- அனுதாபங் கொட்டினர்.

புரிந்தது!
எல்லாமே
இப்போது புரிந்தது.

- ரங்கா

முற்போக்கான அல்லது சீர்திருத்தவாதக் கருத்துகளை வாரி முடிந்துகொண்டவர்களுடன், இந்தச் சமூகத்துக்குள் சமரசமாகி வாழ்ந்துவிடலாமென எண்ணிவிடுகிருள் 'இதுவே பெண் விடுதலை' என்றும் எண்ணிவிடுகிருள் என்பதை; இவளைப் புதுமையுள்ள பெண்ணுகச் சித்தரிப்பதால் ஊகிக்க முடிகிறது.

- இந்தச் சமூகம் மாற்றப்படாதவரை - கலை, இலக்கியம், கலாசாரம் என்பன புதிய போக்கில் மாற்றப்படாதவரை- ஆண்களின் கையில் அதிகாரம் இருக்கும்வரை - பெண்ணினத்துக்கு விடுதலை என்பதே இருக்கமுடியாது என்பதை ரேகா ஏனே உணரவில்லை. மாருக இந்தச் சமூகத்தில் விட்டுக்கொடுப்புகளுக்குட்பட்ட கருத்தொற்றுமையின் அடிப்படையில் உறவாடிக் கொள்வதன் மூலம் பெண் விடுதலை பெற்றுவிடலாம் என்று பறைசாற்றும் ஏராளமான முற்போக்கு முலாம் பூசிக்கொண்ட புதுமைப்பெண்களின் பட்டியலில் இவளும் சேர்ந்துவிடுகிருள்.

மேலும் பார்ப்போமானல் நோர்வேயில் வாழ்ந்துவரும் ரேகா பிரேமை உதறித் தள்ளிவிட்டு தாலி குங்குமம் இல்லாது இங்கு வாழ்ந்துவிடலாம் என்ற துணிவில் இம் முடிவுக்கு வந்துவிடுகிருள் போல் இருக்கிறது. அல்லது இவை அனைத்தும் பண்டையகால இலக்கியத்தில் வரும், (தாலி, குங்குமம் ஆகியவற்றின்) மகிமையை உணரவில்லை என்பதால் ஏற்படும் மனப்புழுக்கத்தில் வேண்டாம்



இந்த ஆண்களின் சகவாசம் என்று ஒதுங்கிவாழ நினைக்கிருள்போலும் இந்தப் புதுமைப் பெண்.

ரேகா ஏனே தாலி குங்குமம் எல்லாம் பெண்களுக்கு இந்தச் சமூகத்தில பூட்டப்படும் அடிமை விலங்குகள் என்பதை அடித்துக் கூறத் தயங்குகிருள். ஓஹோ...இந்தச் சமூகத்தில் இனி ஒருவனுடன், நல்லவனுடன், என்னைப் புரிந்தவனுடன் - எனக்கும் ஆசைகள் இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்பவனுடன் சமரசம் செய்துகொள்ள வேண்டுமல்லவா?

அதாவது இந்தச் சமூகத்தில் தனது கருத்துகளுடன் அதிகளவில் சமரசம் செய்துகொள்ளக் கூடிய -ஒரு நல்லவனை- இவள் தேடுகிருள். பிரேமின் இந்த மாற்றத்துக்கு இவனுடன் ஊறிபோன

சந்தியா திருக்குமார்,
6060 ஹாரைட்.

மடமைகளும், சமூகமும்தான் காரணம் எனவே சமூகத்துள் புரையோடிப் போன பெண்ணடிமை வேர்களை அறுத்து இச் சமூகத்தை மாற்றிக்கொள்ளவேண்டும் அதற்காகப் பெண்கள் ஸ்தாபனப்படவேண்டும் என்பதை உணராது ஆண்கள் எப்பதான் மாறப்போகிருர்கள் என ஏங்குகிருள்.

பெண்களாகிய நாம் ஓர் புதிய சமூகத்தை உருவாக்கவேண்டும், நமது துயரெல்லாவற்றையும் பலமாக மாற்றி உறுதியான திடமான பாதையை வகுக்க ஸ்தாபனமயப்படவேண்டும், அதற்காக நான் தயார் என்றுற முடிவுடன் நிமிர்ந்து சிரித்திருந்தாளாயின் - உண்மையில் இவள் இனி அழுவதற்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவே. ரேகா இப்படி ஒரு முடிவுக்கு வந்திருந்தால்... பிரேமுடன் வாழமுடியும் என்ற முடிவுக்குக்கூட வந்திருப்பாள். ஏனெனில் குடும்பம் எனும் கடலில் இறங்கி ஆழமாக நீந்துவதன் மூலம்தான் - பெண் அடிமையின் நுண்ணிய தளைகளைக் களைந்தெறிவதற்காக - வளையோசை வழிகாட்டவும், விழியோரம் விளக்கேற்றவும் பக்குவப்பட்டுக் கொள்ளும் என்பதை அறிந்துகொள்வாள். இந்த விடயத்தில்தான் பெண்கள் பலவீனமாக இருக்கிருர்கள். குடும்பம் ஆகுமுன்னர் 'பெண் விடுதலை' என்று கண் சிவக்கப் பேசியவர்கள், பின்னர் மூர்ச்சையாகிப் போய்விடுகிருர்கள். இல்லை என்ருல் உதறித் தள்ளிவிடுகிருர்கள் அப்படியாயின் சமூகம் மாற்றப்படும்வரை பெண்களுக்கு விடுதலை இல்லை என்ற உண்மை இப்படி இருக்க அதுவரை எத்தனை பெண்கள் வாழாவெட்டியாகத் தாலி குங்குமம் இன்றி வாழ்வது? இதைவிடுத்து பிரேம் போன்ற காதலர்களுடன் வாழ்வதும், தொடர்ந்தும் திடமுடன் அவர்களுடன் போராடுவதும், இப்போராட்டத்துக்குத் துணையாக ஸ்தாபனம் ஒன்றை உருவாக்கிக் கொள்வதும் அதனூடு சமூகத்தை வென்றெடுப்பதுமே பெண்விடுதலையின் சரியான வழியாகும். இல்லாவிடின் 'பெண் விடுதலை' அல்லது 'புதுமைப் பெண்' என்ற சொற்கள் எல்லாம் வெறும் காகிதச் சொற்களாகவே ஆகிவிடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஒரு கண்டனம்

கடந்த ஒக்ரோபர் மாதம் பதினைந்தாம் திகதி மாலை ஒஸ்லோ, கிறிங்சோ மாணவர் விடுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில்வைத்து க.பிரேமச்சந்திரன் (பா.உ, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ) அவர்களும், அவரோடு வந்தவர்களும் பேசவிடாது தடுக்கப்பட்டதுடன், தாக்கப்பட்டுமுள்ளனர்.

ஒருவருடைய கருத்துச் சுதந்திரத்தை மறுக்கும் இச்செயலானது, எந்தத் தனிநபர்களாலோ, குழுவினாலோ மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியது.

இந் நிகழ்வானது ஜனநாயகத்தைப் பெரிதும் மதிக்கும் நோர்வே மக்களின் மனதில், எமது சமூகத்தைப் பற்றி அழிக்கமுடியாத கறையொன்றை ஏற்படுத்திச் சென்றுள்ளது. இந்தச் சம்பவத்தை நாமெவரும் வெறும் சம்பவமாக மட்டும் கருதி உதாசீனம் செய்துவிடமுடியாது.

எமது சமூகத்தின் நலனில் அக்கறையுள்ள எவரும் இவ்வாறனதொரு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள். வெளிநாடுகளில் வாழும் நாம் எமது விடுதலைக்குச் சர்வதேச ஆதரவைத் திரட்டும் வகையிலேயே உறுதியாகச் செயற்படவேண்டும். ஏற்கனவே, வெளிநாடுகளில் எம்மவர் சிலரின் சமூகவிரோத நடவடிக்கைகள் எமது போராட்டம் தொடர்பாகப் பிழையான பார்வையைச் சர்வதேச ரீதியில் ஏற்படுத்தியதைக் கணக்கில் எடுக்காமல் விடமுடியாது.

– சுவடுகள்



## ஆயிரம் பூக்கள் மலரட்டும்!



## தமிழர்களின் இரத்தங்கள் இது முறையா?

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒருசில தமிழ் அரசியல் வாதிகளின் மேல் நடத்தப்பட்ட பலாத்கார நடவடிக்கை நோர்வே மக்களிடையேயும்,இங்கு வாழும் வெளிநாட்டவரிடையேயும் நல்லெண்ணத்தை வளர்க்கப் பாடுபடுவோரின் மனதிலும்,நோர்வே வாழ் தமிழ் மக்கள் மனதிலும் மிகுந்த சோகத்தை உண்டுபண்ணியுள்ளது.

அரசியல்வாதிகள் வருவார்கள் போவார்கள்,அவர்கள் எமக்குப் பிடிக்காதவர்களாகவே இருக்கட்டுமே,அவர்கள்மீது பலாத்காரம் புரிவதால் யாருக்கு அவமானம்?நோர்வே சரித்திரத்தில் வெளிநாட்டு அரசியல்வாதிகள் நோர்வேயில் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டது, படுவது இதுவே முதல் தடவையாகும்.

- தமிழரின் போராட்டத்தின் பெருமையை!
- ஆயிரக்கணக்கான தமிழ்மக்களின் வீரமரணத்தின் மகிமையை!

நோர்வே மக்களிடையே தமிழர்மீது எஞ்சி இருந்த அனுதாபத்தை!

எதிர்காலத்தில் நொந்துபோன தமிழ்இளைஞர்கள் நோர்வேக்கு மாணவர்களாகவோ, அல்லது அகதிகளாகவோ வரும் சந்தர்ப்பத்தை!

– தேன்மதுரத் தமிழோசை உலகெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பாரதியின் கனவை!

ஒரு சிலர் பகுத்தறிவை சில நிமிடங்கள் புதைத்துவிட்டு தமிழ் இதயங்கள் மீது காறித்துப்பிவிட்டதை நினைக்கும் போது நெஞ்சே வெடித்துவிடும் போல் இருக்கிறதே. இப்படிப்பட்டவர்களிடம் வெடிகுண்டோ, துப்பாக்கியோ இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்கள். நாம் இழந்த தமிழ் சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை போதாதா?

இந்த நாட்டிலும் கூட தமிழரின் உயிருக்கு தமிழர் மரியாதை கொடுக்கக்கூடாதா? இத் தடவை தமிழனின் உயிர் இந் நாட்டில் பறிக்கப்படவில்லை. அடுத்த தடவை தமிழரின் கௌரவம் அரைக்கம்பத்தில் கொடிகட்டிப் பறக்க விடப்படமாட்டாது என்பதற்கு என்ன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உத்தரவாதம் உண்டு?

இந் நாட்டில் எமக்குத் தேவையானது இந் நாட்டவரின் நல்லெண்ணம், எமது போராட்டத்திற்கு அவர்களின் ஆதரவு, எமது நாட்டைக் கட்டியெழுப்ப அவர்களின் தோழமை.

இதை நாம் பத்திரிகை மூலமாகவும், வானொலி, தொலைக்காட்சி மூலமாகவும் பறக்கவிடலாமா?

எட்வின்
ஒஸ்லோ.

## ஒஸ்லோவில் ஒரு ஒன்று கூடல்

'இமேஜ்'

'மனந்திறந்து கதைத்தல்'

'உண்மையைச் சொல்லு மச்சான்'

'மற்றவை சொல்லேக்கை கேக்கவேணும்...
இப்படிப் பலவகையான சனநாயக உரையாடல்கள். சொற்களைப் பாவிக்கும் விதத்திலும்சரி, இடைவெளிவிட்டு மற்ற மனிதன் என்ன சொல்கிறான் என்று கேட்பதில் அவர்கள்காட்டும் பொறுமையிலுஞ்சரி...

இதை 'சனநாயக உரையாடல்' என்பது சாலவும் பொருந்தும்.

நான் எதைச் சொல்கிறேனென்றால் ஒஸ்லோவில் நடந்த ஒரு உரையாடல்பற்றி...

'நாடகம்' என்றசொல் எல்லோர்க்கும் பரிச்சயமானது. ஆனால் அதைப்பற்றிக் கதைத்தல் சாத்தியமற்றது. பொதுவாக பாலேந்திரா, மௌனகுரு, தாசீசியஸ், சிதம்பரநாதன்... என நீண்டுகொண்டுபோய் கடைசியில் ஒரு மாணவன் 'தமிழ்நாடக வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை வரைக' என்ற 'ரியூற்றோறியலு'க்கு மறுமொழி சொல்லும் விதமாக அமைந்துவிட்டது.

இந்த இடத்தில் ஒன்றைக் கவனிக்கவேண்டும். 'தமிழ் நாடக வளர்ச்சி' என்றால் என்ன? 'நவீன நாடக வளர்ச்சி' என்றால் என்ன? என்பதுபற்றி.
நவீன நமது நாடகம் துரதிஸ்டவசமாக இயக்கம் சார்ந்துபோனது. 'நாடகத்தைப் பிரச்சாரப்படுத்து' என்ற கோசமும்; இல்லாவிடில், எழுதாமல்... நடிக்காமல்... அடங்கிவிடு என்ற நிர்ப்பந்தமும் இருந்தது, இருக்கிறது, இருக்கும்.

எண்பத்துமூன்றுகளுக்குப் பிறகு இயக்கஞ் சாராத நாடகங்கள் வரவில்லை; வரவும் முடியாது. 'மௌனகுரு'வால் "சக்தி பிறக்குது" போடமுடிந்தது இயக்கஞ் சாராமல். கலை மக்களுக்காக எனும் மூளைச் சலவையினுள் ஆட்பட்ட கலைஞன் - தனக்கு வசதியான இடத்தில் தன் கலையைத் தேடிப் படைக்க முயல்வது இயல்பு. இயக்கஞ் சாராத ஒரு பெரிய இயக்கம் பெண்விடுதலை இயக்கம். (மௌனகுரு சார் மன்னிக்க! இது உங்களுக்கில்லை!)

சர்வேந்திராவுடன் கதைத்தபோது அவர் 'கலை மக்களுக்காகவே' என்றும், 'கலை கலைக்காகவே' என்று நான் சொன்னபோது "நீங்கள் தீவிரமாக விரக்தி அடைந்துவிட்டீர்கள்" என்றும் சொல்லுமளவுக்கு அவர் மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளார் எனவும் எண்ணத் தோன்றுகிறது. என்னைப் பொறுத்தவரையில் கலைபற்றிய கோட்பாடுகளை ஒருவன் கற்றுத் தேறவேண்டியதில்லை. உண்மைக் கலைஞனையும்... உண்மைக் கலையையும் என்றைக்கும் எமது மண் இனங்காணத் தவறியதில்லை. இங்கே நாம் விடும் தவறு படைப்புகளைவிட விமர்சனங்களால் மக்களைச் சீரழிக்கிறோம் என்பதுதான்.

ஒரு வைரமுத்துவை (V.V.)... அல்லது அடங்காப் பிடாரியை... தட்சணாமூர்த்தியைத் தெரிந்த அளவுக்கு பாலேந்திராவையோ... சிதம்பரநாதனையோ... மௌனகுருவையோ தெரிந்திருக்க நியாயமில்லை எமது மக்களுக்கு. ஆனால், இதிலுள்ள முக்கிய விடயம் முன் மூவரும் இயக்கஞ் சாரவில்லை. இவர்களுக்கு கலைபற்றிய கோட்பாடு தெரியாது. இவர்களிடம் ஒறிஜினலிட்டி இருந்தது. இவர்கள் படைத்தார்கள்.... கலையை கலைக்காகப் படைத்தார்கள். உதாரணமாகத் தட்சணாமூர்த்திக்குக் கலைக்கோட்பாடு தெரியாது. தன் தவிலைத் தானே ரசித்தான். தவிலில் அவன் தன்பாட்டில் விளையாடினான். அவனுக்கென உண்டான தலைக்கனம் நியாயமானது. என் திறம் எவர்க்குமில்லை எனும் கனம். அவனது கலை மக்களுக்குச் சேவைசெய்ததைவிட கலைக்குக் கூடச் சேவைசெய்தது. அவன் வாழ்கிறான்; அவன் கலை வாழ்கிறது.

இந்த 'ஒடியன்சுக்கு' இப்படித்தான் நாடகம் போடவேண்டும் என்ற கோட்பாட்டை விட்டுவிட்டு ஒரு நல்ல நாடகத்தைப் போடுங்கோ, அதை மக்கள் ரசிப்பார்கள் நிச்சயமாக. கலையின் தரத்துக்கு மக்களை உயர்த்த~~வேண்டியதை விட்டுவிட்டு மக்களின் தரத்துக்குக் கலையை இறக்குவது ஒரு கலைஞனின் வேலையல்ல. மக்களின் தரத்துக்கு என்றைக்கு~~ ஒரு கலைஞன் இறங்குகிறானோ அன்றைக்கு அவன் 'கலைஞன்' என்ற பெயரை இழந்து புதிய பெயர் பெறுகிறான். அவன் பெயர் என்ன தெரியுமோ? அரசியல்வாதி.

ஒஸ்லோவில் சுமார் முந்நூறுபேர் சர்வேயின் 'சக்தி பிறக்குது'வை ரசித்தார்கள் என்றால் சொல்லப்பட்ட கருத்தை ரசித்தார்கள் என்பது சுத்தப்பொய். இலங்கையில் இப்பொழுது எவ்வாறு பெண்கள் அடக்கப்படுகிறார்கள் என்பதை அண்மையில் இலங்கைக்குப் போய்வந்த டொக்டர் சண்முகரட்ணத்தால்

www.tamilarangam.net

மிக அழகாகச் சொல்ல முடியும். இதற்குக் காலத்தால் பிந்திய மௌனகுருவின் ஸ்கிறிப்ற் தேவையேயில்லை. மக்கள் வடிவத்தைத்தான் ரசித்தார்கள். தமக்குத் தெரிந்த விசயத்தை எவ்வளவு அழகாக இவன் சொல்கிறன் என்பதைத்தான் ரசித்தார்கள். மௌனகுரு இதற்கூடாகப் புதிய செய்தியெதையும் சொல்லிவிடவில்லை. இங்கே கலையைத்தான் பார்த்தார்கள். இந்த இயக்குநர் இதை 'நாட்டிய நாடகம்' என்று போட்டதே பரதக் கலைக்காகத்தான். 'கலை மக்களுக்காக' எனும் கோட்பாடு கொண்டவர் ஏன் மக்களின் சுடும் பிரச்சனைகளை தொட்டிருக்கக் கூடாது. இவருக்கு மக்களைவிட கலையில் கூட நாட்டமென்பதுதான் உண்மை.

இதைத்தான் இன்னேர் வார்த்தையில் 'கலை கலைக்காக' என்று சொல்கிறர்கள்.

நாடகம் நடந்து முடிந்தபின்னர் ஒரு கதையாடல். உண்மையில் நாடகக் கலைஞர்கள் மனம்விட்டுப் பேசினர்கள். ஒரு நடிகை, தான் ஒஸ்லோவைவிட்டுப் பிரிகிறேன்... இந்தக் குழுவைவிட்டுப் பிரிகிறேன்... எனச் சொல்லி அழுதாள். அனைவரும் அழுதோம். உணர்வுகளுக்கு முக்கியம் கொடுக்கும் ஒரு 'சீரியசான' நாடகக்குழு இது. 'மிளகாய்த்தூள் உங்கட 'கொமியூன்'இல என்ன விலை விக்குது?' என்று கேட்கிற சனத்திலிருந்து வேறுபட்டுத் தங்களைக் கலைக்காகப் பலியிடுகிற கூட்டம் இது; அதுவும் பெண்கள். எந்தக் 'கிசுகிசு'களுக்கும் அஞ்சாமல் தங்கட 'இமேஜ்' பற்றின

* சுவடுகளில் வெளியாகும் படைப்புகளில் உள்ள கருத்துகள் படைப்பாளிகளின் கருத்துகளே. இக் கருத்துகள் சுவடுகளின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

சுவடுகள்

சுயவிமர்சனம்செய்ய முன்வந்தது புல்லரிக்கவைக்குது.

நான் ஒன்றுமட்டும் சொல்வேன்.

நல்லது வாழும்.

கெட்டது தாழும்

இதை 'நோட்டீஸ்' அடிச்சு ஒட்டவேண்டிய தேவையில்லை.

– ஆதவன்–
(டென்மார்க்)

பிற்குறிப்பு:-

இது ஒரு ஆய்வுக் கட்டுரையல்ல.
ஒரு மனத் 'திறப்பு'...
இத் திறப்பால் மனக்கதவுகள் பலவற்றைத் திறக்கமுடியும் என நம்புகிறேன்.



# செய்திச் சுவடுகள்

* கண்டியில் ஏழு சடலங்கள் மீட்கப்பட்டன.
* நெடுங்கேணியில் டிராக்டரில் சென்ற ஆறு பொதுமக்கள் கண்ணி வெடிக்குப் பலியானர்கள்.
* மன்னர்த் தாக்குதலில் 24 இந்தியப் படையினர் பலியாகினர்.

ஒகஸ்ட் 20

* வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு ஒரு கோடி ரூபா செலவில் அச்சகம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

ஒகஸ்ட் 21

* வன்செயலைக் கைவிட்டு யுத்த நிறுத்தம் செய்யுமாறு ஜே.வி.பி.க்கு பிரதமர் விஜேதுங்கா கோரிக்கை விடுத்தார்.

ஒகஸ்ட் 22

* கொழும்பு பெரியாஸ்பத்திரி வேலை நிறுத்தம் முடிவு பெற்றது. பத்து நாட்கள் நிகழ்ந்த வேலை நிறுத்தத்தால் சகல வைத்திய சேவைகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

ஆகஸ்ட் 27

* வடக்கு, கிழக்குக்கு மின்சாரம், எரிபொருள் விநியோகம் சீராகுமென ஈழவர் முன்னணி பா.உ. க்களிடம் அரசு உறுதியளித்துள்ளது.
* கண்டியில் 12 சடலங்கள் மீட்கப்பட்டன, பேராதனை பல்கலைக்கழக எல்லைக்குள் 50 பேர் கைதாகினர்.

ஆகஸ்ட் 28

* அனுராதபுரத்தில் 10 வீடுகள் எரிக்கப்பட்டன.
* முல்லைத்தீவில் நிகழ்ந்த தாக்குதலில் பொலீசாரும், படைவீரரும் பலியாகினர்.

ஆகஸ்ட் 29

* மனித உரிமை ஆட்கொணர்வு வழக்குகளில் வாதிடுபவரான சட்டத்தரணி காஞ்சன அபேபால கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து சட்டத்தரணிகள் சகல நீதிமன்றங்களையும் பகிஸ்கரித்தனர்.

ஒகஸ்ட் 30

* அணிசேரா அமைப்பு மகாநாட்டுக்கு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தலைமையில் தூதுக் குழு பெல்கிரேட் பயணமானது.

செப்டம்பர் 1

* சர்வகட்சி மாநாடு பற்றி ஜனதிபதி பிரேமதாச அறிவித்தார்.

செப்டம்.2

* கொழும்பு துறைமுகத்தில் பொருட்களை ஜே.வி.பிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.
* ஈரோஸ் தலைவர் பாலகுமார் இரண்டாவது தடவையாக ஜனதிபதியைச் சந்தித்தார்.
* தொணியகல முகாமில் படை வீரர் ஒருவர் சக வீரர் நால்வரைச் சுட்டுக் கொன்றார்.

செப்டம்.10

* பௌத்த மதகுரு ஒருவர் அனுராதபுரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

செப்டம்.11

* மொரட்டுவ பல்கலைக்கழகத் துணைவேந்தர் போராசிரியர் பட்டு விதான சுட்டுக் கொல்லப்பட்டார்.
* அளவ்வ புகையிரத நிலையம் எரிக்கப்பட்டது

செப்டம்.12

* கொழும்பில் வைத்தியசாலைகள் இரு வாரங்களிற்குப் பின் இயங்கத் தொடங்கின.
* அரச படையினர் சேவையிலிருந்து விலகாவிட்டால் அவர்களின் குடும்பங்கள் கொல்லப்படுமென ஜே.வி.பி. அச்சுறுத்தியுள்ளது.

தலாய் லாமாவுக்கு நோபல் சமாதானப் பரிசு. – செய்தி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

* ஒரே நாளில் இலங்கைப் படையினரின் தேடுதல் நடவடிக்கையால் 989 பேர் கைதாகினர்.
* பல்கலைக் கழக மாணவர்கள் 56 பேரைக் காணவில்லை என பல்கலைக் கழக மானியக் குழு அறிவித்தது. நான்கு மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

ஒகஸ்ட் 23,

* பயிலுனர் ஆசிரியர் தெரிவு இன விகிதாசார அடிப்படையிலேயே நடக்கும் எனக் கல்வி அமைச்சு அறிவித்தது.
* மாத்தறையில் ஏழுபேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
* கண்டியில் ஐந்து சடலங்கள் மீட்கப்பட்டன.

ஒகஸ்ட் 24
* ஒரே நாளில் 1092 பேர் இலங்கைப் படையினரால் கைதாகினர்.

ஒகஸ்ட் 25

* சுவரொட்டிகள் மூலம் குடும்பங்களைப் பழிவாங்குவதாக ஜே.வி.பி.யினரும், அரச படையினரும் அறிவிப்பது பற்றி சுதந்திரக் கட்சி கண்டித்துள்ளது.

ஆகஸ்ட் 26
* சர்வ கட்சி மகாநாடு உடன் கூட்டப்பட வேண்டும் என முஸ்லீம் காங்கிரஸ் பா.உ. கோரிக்கை விடுத்துள்ளார்.

இறக்கும் வேலை ஸ்தம்பிதமாகியதால் 27 கப்பல்கள் துறைமுகத்தில் துறைமுகத்திற்கு வெளியே தரித்தன.
* அமெரிக்க டொலரின் விலை நான்கு ரூபாவால் அதிகரித்தது.
* கண்டியில் 20 சடலங்கள் மீட்கப்பட்டன.

செப்டம்.3
* பதின்மூன்று தமிழ் எழுத்துகளின் வரிவடிவம் மாற்றப்படும் என அமைச்சர் பி.தேவராஜ் கூறியுள்ளார்.

செப்டம்.4
* கைதாவோர் பற்றித் தகவல் பெற அரச அதிபர் பிரிவுகள் தோறும் தகவல் நிலையங்கள் நிறுவப்படும் என ஜனாதிபதி பிரேமதாச அறிவித்தார்.
* ஒரு வார வேலை நிறுத்தத்தின் பின் கொழும்பு வழமைக்குத் திரும்பியது.

செப்டம்.5
* அரச நிர்வாக விடயங்களில் இந்தியப் படையின் பணிப்பை ஏற்க வேண்டாம் என இலங்கை அரச வடக்கு, கிழக்கு அரச அதிபர்களுக்கு அறிவித்துள்ளது.
* ஒரு வாரத்தின்பின் பெருமளவு தபால், தந்திகள் வடக்கு, கிழக்குப் பகுதிக்கு வந்து சேர்ந்தன.

செப்டம்.6
* இறப்பர் ஆராய்ச்சி நிலையத் தலைவர் மெரில் காரியவசம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

செப்டம்.8
* சர்வ கட்சி மாநாட்டில் கலந்துகொள்ள






செப்டம்.13
* இலங்கையில் அமைதியை ஏற்படுத்தும் நோக்குடன் இன்று சர்வகட்சி மாநாடு தொடங்கியுள்ளது.

செப்டம்.16
* வட, கிழக்கு எழுத்தாளர்களுக்கு சாகித்திய மண்டலப் பரிசு வழங்க மாகாண சபை அரசு முடிவு செய்தது.
* நான்கு தினங்களில் நூறு அரச கட்டிடங்கள் தீயிடப்பட்டன.
* கிளிநொச்சியை வடமராட்சியுடன் இணைக்கும் புதிய வீதியொன்று உருவாகவுள்ளது.

செப்டம்.18
* மாலைதீவுச் சதியில் பங்கேற்று மரண தண்டனை வழங்கப்பட்ட 12 இலங்கையர்க்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

செப்டம்.20
* இந்தியப் படையின் நடவடிக்கை நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.

செப்டம்.21
* யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட விரிவுரையாளர் ரஜனி திரணகம சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் விரிவுரையாளரும், உடற் கூற்றியல் பிரிவுத் தலைவருமான ரஜனி திரணகம செப்டம்பர் 21ம் திகதி பல்கலைக் கழகத்தின் அருகில்



வைத்து இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மேற் படிப்பை வெளிநாட்டில் முடித்தபோதும், தாய்நாட்டுக்கும், மக்களுக்கும் சேவை செய்ய நாடு திரும்பிய ரஜனி இந்தியப் படையினரால் மாணவர்கள் கைதாகும் போதெல்லாம் அவர்களை மீட்பதில் முன்னின்று உழைத்தவர். அடிப்படை மனித உரிமைகளுக்காக பல்கலைக் கழக ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் இணைந்து போராடிவந்தார்.

செப்டம்.24
* வடக்கு, கிழக்கிற்கெனத் தனியான பொலிஸ் படை நிறுவப்படும் என முதல்வர் வரதராஜப் பெருமாளிடம் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன உறுதி வழங்கினர்.

செப்டம்.26
* பிரபல பத்திரிகையாளர் றெஜி மைக்கல் காலமானர்.
* ரஜனி திரணகமவின் படுகொலையைக் கண்டித்து தமிழர் தேசிய சபை வடக்கு, கிழக்கில் துக்கதினம் அனுட்டித்தது.

செப்டம்.27
* அரச படைகளுக்கும், ஜே.வி.பி.க்கும் இடையில் 72 மணி நேர யுத்த நிறுத்தம் தொடங்கியது.
* லண்டனில் தேயிலை விலை மூன்று வருடங்களின் பின்னர் அதிகரித்தது.

செப்டம்.28
* யாழ். மாவட்ட பா.உ. பிரேமச்சந்திரன் இங்கிலாந்து பயணமானர்.

செப்டம்.30
* ஜே.வி.பி. அரச யுத்த நிறுத்தம் வெற்றியளிக்காத போதிலும், மேலும் நீடிக்கப்பட்டது.

செப்டம்.22
* இந்தியா போர் நிறுத்தத்தை மீறியது என்ற புலிகளின் குற்றச்சாட்டை இந்தியா மறுத்தது.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## பிறந்த நாள் விழாக்களா?

## கலை நிகழ்ச்சிகளா?

## திருமண வைபவங்களா?

ஒரே நாளில் முடிந்துவிடும் இந்த நிகழ்ச்சிகளை வாழ்நாள் முழுவதும் நினைவுகூர, இந்த நிகழ்ச்சிகளைத் தரமான முறையில் ஒளி, ஒலிப்பதிவு செய்து கொள்ளுங்கள்.

தரமான முறையில் ஒளி, ஒலிப் பதிவுடன் சிறந்த முறையில் வீடியோப் படப்பிடிப்பு மேற்கொள்ள நோர்வேயின் எல்லாப் பகுதிகளில் உள்ளோரும் நினைவில் வைத்திருக்கவேண்டிய ஒரே இடம்.

**THANGAM VIDEO VISION,**

**S.JEGANATHAN,**
**LUTVANNS VEIEN,33,**
**0676,OSLO 6**

தொலைபேசி இலக்கம் 02/325504
திருமண வைபவங்களுக்குத் தேவையான மணவறை, அலங்காரப் பொருட்கள் யாவும் குறைந்த வாடகைக்கு வழங்கப்படும்.

அழகான முறையில் திருமணப் பத்திரிகைகள் அச்சடிக்க எங்களை நாடுங்கள்.

***** தங்கம் வீடியோ விஸன் *****
**நோர்வே**






# சாயம் போகாத போலிகள்

*வான்நிலா*

வசந்தகாலத்திற்கான வரவேற்பில் ஆரவாரம் தொனித்தது. வெறுமையோடு சோர்ந்து நின்ற மரங்கள்சிரித்துப்பேசி மகிழ்ந்தன. ஆங்காங்கே சில கடைகளில் செவ்வரத்தை, செவ்வந்தி, மல்லிகையின் மணமும் கமழ்ந்தன. பச்சைப் புல்வெளிகளைத் திறந்த மேனிகள் பல மறைத்துக்கிடந்தன. குதூகலத்தைச் சொத்தாகக்கொண்ட குழந்தைகள் நிறைந்த அந்த வீதியில் சென்றுகொண்டிருந்த அவர்களிருவரும் எங்கே தம்மை மறந்து சிரித்துவிடுவார்களே என்பதாற்போலும் "ஸ்வாத்" என்ற வாசகங்கள் காற்ருேடு கலந்து, காதுகளேத் தீண்டிச் சென்றன. மௌனமாக ஒருவரையொருவர் பார்த்துவிட்டு அந்த வீதியைக் கடந்தனர்.

கண்ணம்மாவும், சுகந்தனும் பிறந்தநாள் வைபவமொன்றிற்குச் சென்றுகொண்டிருந்தனர். அவர்களிருவரும் விரும்பியோ, விரும்பாமலோ பல காரியங்களைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம். ஏன் வாழ்கிருேம்?, எதற்கு வாழ்கிருேம் ? எம் வாழ்விற்கு என்ன அர்த்தம்? இவைகளைத் தெரியாமலே அவர்கள் வாழ்ந்துகொண்டிருந்தனர். "கண் போன போக்கிலே கால் போகலாமா ? கால் போன போக்கிலே மனம் போகலாமா?" இப்படி சௌந்தரராஜன் பாடுவதையும் அவர்கள் அடிக்கடி கேட்டுக் கொண்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுகந்தனைத் தேடிப்பிடித்து கண்களால் பேசிக்கொண்டாள்.

கனகமக்கா திடீரென விழித்துக்கொண்டாற் போல் கண்ணம்மாவின் பக்கம் திரும்பி "நீர்தான் சுகந்தனடை..." என அரைகுறை அறிமுகத்தினை நிச்சயப்படுத்திக்கொண்டு, சற்றுத் தள்ளியிருந்த மற்றப் பெண்களுக்கும் இவளை அறிமுகம் செய்துவைத்தா. இப்போது அவர்களும் நெருக்கமாக வந்து அமர்ந்துகொண்டனர்.

வழக்கமான புருசர்கள் - குழந்தைகள் - நகைகள்- சேலைகள் பற்றியேகதை சுற்றிச் சுற்றிச் சுழன்றுகொண்டிருந்தது.

"நீர் ஏன் நகை போடேல்லை? உம்மடை குடும்பம் அவ்வளவு வசதியில்லையெண்டு அறிஞ்சனுன்தான். ஆனு இங்கை நீர் கொஞ்சமெண்டாலும் அவரிடைச் சொல்லி ஒண்டு, ரெண்டைச் செய்வியும்."என்று கனகமக்கா முன்மொழிய, "ஓமோம், உப்பிடி நகையில்லாம வாறது சுகந்தன்ட சொந்தங்களுக்கும் மதிப்பில்லையெல்லே" சுந்தரம் மாமி வழிமொழிய மற்றவர்கள் தலையாட்டியபடி கண்ணம்மாவின் பதிலுக்குக் காத்திருந்தனர். அவள் எதுவும் பேசவில்லை.
"நீங்க இயக்கத்திலை இருந்தனீங்களே?" ஒரு இளம் பெண் இப்படிக் கேட்டது கண்ணம்மாவுக்குக் குழந்தைத் தனமாகப் பட்டது. "இல்லை"–நிதானமாகச் சொன்னுள். இந்தப் பதிலை விட அவளிடமிருந்து அவர்கள் நிறையவே எதிர்பார்க்கிருர்கள் என்பதைக் கண்ணம்மா உணர்ந்தாள். இப்போது கூடியிருந்து துலாவித் துலாவிக் கதை கேட்டுவிட்டு பின்னர் ஒருவர் கதைத்ததை இன்னெருவரிடம் சொல்லும் போது " அவ நல்லா விடுவா - புழுகுவா - (f)பஸ் அடிப்பா விலாசமடிப்பா" என்று சொல்வதற்குத்தான் இவர்கள் துடியாய்த் துடிக்கிருர்கள் என்பது அவளுக்கு நன்கு விளங்கியது.
"நகை போடுறதையும், செய்விக்கிறதையும் விடப் பிரச்சனை, ஏன் போடுறமெண்டதுதான். நகை போடுறது வடிவுக்கெண்டதைவிட, அது எங்கடை 'ஸ்டேட்டசைக்' கொஞ்சம் கூட்டிக் காட்டும் எண்டுதான் கன பேர் போடீனம்" கண்ணம்மா கனகமக்காவை ஆழமாகப் பார்த்தபடி சொன்னுள்.
" உங்களுக்குத் தெரியாதக்கா, ஊரிலை எத்தின பேர் இரவல் நகை போட்டுக் கொண்டு துடக்கு வீடு, கலியாண வீடு ஏன் செத்த வீட்டுக்கும்கூடப் போகினம், ஆமி கள்ளர் உப்பிடி ஆயிரம் பிரச்சினைக்கை இரவல் நகை வேண்டி, போட்டுத்தான் போகிற நிலைமையெண்டா...." கண்ணம்மா ஒரு இழுவை இழுத்தபடி கண்களைச் சுற்றி ஒரு நோட்டம் விட்டாள்.
"நீர் சொல்லுறதும் நியாயம் தான். என்னட்டையே எத்தினையோ பேர் இரவலுக்குச் சங்கிலி வேண்டியிருக்கினம்" ஒரு பெண் கூறியபோது அவள் அதை எந்த நோக்கத்தோடு சொன்னுள் என்பது கண்ணம்மாவுக்குப் புரியவில்லை. இதிலயும் விலாசம்...? நெத்தியடி ? ஏதாவது இருக்குமோவென அவளுக்குச் சந்தேகம் படர்ந்தது.
"எத்தினையோ பேர் நகை போடாட்டி மதிப்பில்லையெண்டு நினைக்கினம்,



இன்றைய பிறந்த நாள் வைபவத்துக்கு அழைப்பு வந்ததும் "இவளுக்கு ஏழரைச் சனியன்" என அம்மம்மா முன்னர் ஒரு தடவை சொன்ன போது, தான் சிரித்தது கண்ணம்மாவுக்கு ஞாபகம் வந்தது. ஏழரைச் சனியன் ,அட்டமத்துச் சனியன் எல்லாம் பொய்யோ மெய்யோ என்று சிந்திப்பதைவிட இதைவிட வேறு ஏதாவது சனியனிருந்தால் அதுவும் தனக்குப் பிடித்துவிட்டதாகவே அவளுக்குத் தோன்றியது.

வழக்கமான அலங்காரங்கள், வரவேற்புகள் நிறைந்த சிறிய மண்டபத்தில் அம்மன் சிலைகளை நிகர்த்தாற்போல் பல பெண்கள், ஆண்கள், குழந்தைக் நிறைந்திருந்தனர். "வாங்கோ.... வாங்கோ" என்ற உதட்டின் அழைப்பை உள்வாங்கியபடியும், உதட்டால் மட்டுமே சிரித்தபடியும் இவர்களும் அவர்களோடு ஒருவராகினர்.

இவர்களைக் கண்டதும் சற்றுத் தூரத்தில் வளவளத்துக் கொண்டிருந்த சுந்தரம் மாமி பட்டுச் சேலை சரசரக்க மின்னல் வேகத்தில் வந்து குசலம் விசாரித்தபடி கண்ணம்மாவுடன் ஒட்டினுற் போல் அமர்ந்துகொண்டா.
"ம்..இலேசா வண்டி தெரியிற மாதிரிக் கிடக்கு" மெல்லக் குனிந்து சுந்தரம் மாமி குசுகுசுத்தா.
"இல்லை அப்பிடி ஒன்றுமில்லை" கண்ணம்மா வெடுக்கென்று பதில் கொடுத்தாள்.
"என்னப்பா இது, இங்க பிள்ளை பெறுறது எவ்வளவு சுகம் சொல்லும் பாப்பம், அவன் 'லோனும்' எல்லே கூடத் தருவான். என்டையளெல்லாம் இங்கதான் பிறந்ததுகள்" - சற்றுப் பெருமையுடன் சுந்தரம் மாமி சொல்லிக் கொண்டிருந்தா. சுந்தரம் மாமியின் கதைகளைக் கேட்கும் கேட்காதவன் போல சுகந்தன் கையில் கிடைத்த பேப்பரைத் தட்டிக்கொண்டிருந்தான்.

"நீர் ஏதும் பிரச்சினையெண்டால் சொல்லும், நான் டொக்டரிட்டைக் கூட்டிக் கொண்டு போறன்" மிகவும் உருக்கத்தோடு சொல்லிக் கொண்டிருந்த சுந்தரம் மாமியின் கதைகள் கனகமக்காவின் வரவால் சற்றுக் குழம்பியது.

"வடிவான சாறியப்பா, எங்கை வேண்டினனீர்? உண்மையாக் குமரி போலை இருக்கிறீர்." கனகமக்கா சொன்னபோது சுந்தரம் மாமி தன்னையே மறந்து முகம் சிவக்க சேலையின் வரலாற்றையே கூறத்தொடங்கிவிட்டா. சேலையின் வரலாறு கேட்கும் தன் சோகத்தைவிட குழந்தைப் பேற்று ஆலோசனையிலிருந்து கனகமக்கா விடுதலையளித்துவிட்டதை நினைத்துக் கண்ணம்மா நிம்மதிப் பெருமூச்சொன்று விட்டாள்.
சுந்தரம் மாமி தன் சேலையையும, இளமையையும் சுட்டிக்காட்டிய கனகமக்காவுக்கும் ஏதாவது சொல்ல வேண்டும் என்று நினைத்துப் போலும் "இங்கேப்பா உம்மட நெக்லஸ் எங்க செய்விச்சனீர்?" எனக் குழைந்துகொண்டா. சந்தர்ப்பம் பார்த்திருந்ததுபோல கனகமக்கா தொடங்கினு, ஒரு தொடங்குதான்!
ஐயோ, தாறதைத் தந்து, வேண்டிறதை வேண்டி எங்களை விட்டாக்காணும் என்ற கெஞ்சலான பார்வையுடன் கண்ணம்மா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரவல் வாங்கியெண்டாலும் போட்டுக்கொண்டுதான் போகினம். இது ஆராலை வந்ததெண்டது நினைக்கிறியள் ?" கண்ணம்மா கண்ணம்மா சுந்தரம் மாமியை நோக்கிக் கேட்டாள்.

"இதேன் எங்களுக்கு, எங்களிட்டை இருக்குது போடுறம், இல்லாதவையளுக்கு ஏனுந்த ஆசை? ஒருவேளை துலைஞ்சா என்னெண்டு திருப்பிக் குடுப்பம் எண்டு அதுகள் நினைச்சா வேண்டுங்களே? "சுந்தரம் மாமி சொன்னபோது கண்ணம்மாவுக்குத் தன்னை யாரோ கிணற்றுக்குள் தள்ளிவிட்டாற் போல் உணர்ந்தாள்.

உப்பிடிக் கதையாதையள். காசு இருக்கிற நாங்கள் நகை போட்டாத் தான் ஒரு மதிப்பெண்டு நினைக்கிறபடியாத்தான் கஸ்டத்திலை வாழுற எங்கடை உறவுகள் தங்களையும் ஒரு மனுசராக் காட்ட, தங்களையும் நீங்க அப்பதான் உறவெண்டு நடத்துவியள், மதிப்பியளெண்டு இரவலாவது வேண்டிப் போடுதுகள். "கண்ணம்மா ஆத்திரமும் வேதனையும் கலந்த தொனியில் சொல்லிக்கொண்டிருந்தாள்.

இடையிடையே அதிர்ஸ்டமும் அவளை எட்டிப் பார்க்கத்தான் செய்தது. ஆம் ! 'கேக்' வெட்டுவதற்கான ஆரவாரங்கள் இவர்களது கதையைத் திசைதிருப்பியது. பாடல்கள் ...கைதட்டல்கள் ...படப்பிடிப்புகள்...அன்பளிப்புகள்."

எப்பவும் இப்படித்தான் செய்யிறது வழக்கம், முதல் கேக்கை வெட்டி, பிறகு..." ஒருவரின் குரல் அந்தக் கலகலப்பு நிறைந்த கூட்டத்திலும் ஓங்கி ஒலித்தது. வேதாகம விதிகளெல்லாம் பின்பற்றும் வைதீகர் போல அவர் பேசிக்கொண்டிருந்தார். அவரது ஆகமம் 'கேக்'வெட்டுவதெப்படி? பரிமாறுவதெப்படி? என்ற நியதிகளை எல்லாம் திட்டவட்டமாகச் சொல்லியிருந்தது போல கண்ணம்மாவுக்குப் பட்டது. இவர்களது சமயம், சடங்கு, சாஸ்த்திரமெல்லாமே சந்தர்ப்பத்திற்கேற்ருற் போல கதையளக்கத் தான், கண்ணம்மாவின் முனகல் வெளியில் கேட்பதற்குக் காலம் இன்னும் கனியவில்லை.

'கேக்' பரிமாறப்பட்டதின் பின்பு ஆண்கள் ஒருபுறமாகப் போனுர்கள். கணவர் குடிப்பது விருப்பமில்லையென்று சொல்லிக் கொள்ளும் பெண்கள்கூட ஓடியோடி அவர்களுக்கு கதிரை எடுத்துப் போடுவதிலும், அவர்களுக்குத் தேவையானதைக் குறிப்புணர்ந்து செய்வதிலும் தம்மை அர்ப்பணித்திருந்தார்கள். "ஆண்" என்ற பிறப்புத் தான் அவர்களுக்கு எத்தனை உபச்சாரங்களைக் கொடுக்கிறது. ஆண்கள் இருந்து குடிப்பதற்கான ஒழுங்குகளை முடித்துவிட்ட அவர்கள் கண்ணம்மா இருந்த பக்கமாக வந்து குழுமத் தொடங்கினுர்கள். அவர்களது வாய்க்கு அவர்கள் ஓய்வு கொடுக்கவேயில்லை.

கண்ணம்மாவுக்கு வேதனை நெஞ்சை அடைத்தது. எங்காவது தனிமையில் ஓடிப் போய் விம்மி விம்மி அழ வேண்டும் போலிருந்தது. எத்தனையோ 'செல்' அடியிலும், 'பொம்பர'டியிலும் ஒரு காயம்கூடப்படாமல் உயிர் தப்பியது இவ்வாருன ஒரு நரக வாழ்க்கையை அனுபவிக்கத்தான் போலும் என வெம்பிக் கொண்டாள். வாழ்க்கையைத்தான் ஒவ்வொருவரும் எப்படியெப்படி அர்த்தப்படுத்திவிட்டார்கள். இவர்கள்



படிப்பதுகூட ஒரு விலாசத்துக்கும் வேலைக்கும் மட்டும்தானே? ஒவ்வொரு அடியை எடுத்து வைக்கும்போதும் மற்றர்களுக்கு 'நெத்தியடி' போடுவதில் அக்கறை கொள்கிருர்களென்ருல் இவர்களுக்கு எது வாழ்வு? மற்றவனைவிடத் தனக்கு ஒன்று கூடத் தெரியும் எனச் சொல்வதிலும், காட்டிக் கொள்வதிலும் எவ்வளவு திருப்தியடைகிருர்கள். மற்றவனின் குடும்ப உறவுகள், பிரச்சனைகள் பற்றிப் பேசுவதில் எவ்வளவு சாந்தயடைகிருர்கள். தங்கள் தங்கள் வாசற்படிகளை இவர்கள் எப்பவும் மறந்துவிடுகிருர்கள்.

"எங்கடையவர் உப்பிடி ஏதும் 'பார்ட்டி' எண்டா மட்டும்தான் குடிக்கிறவர். மற்றும்படி ஒண்டுமில்லை" சுந்தரம் மாமி எடுப்போடு சொன்னது கண்ணம்மாவின் சிந்தனைகளை மேலும் தட்டிவிட்டது. - என்னடா இது! 'பார்ட்டி'யிலை மட்டும் எடுக்கிறதெண்டா நாகரீகமெண்டு நினைச்சாவோ இல்லாட்டி ஒசியிலை வாறதுதானே எண்ட நினைப்போ... இருக்குமிருக்கும் தாங்களும் இடைக்கிடை விலாசத்துக்கு 'பார்ட்டி' வைச்சுப்போட்டு போறவாறயிடத்திலை வயிறு குளிர ஊத்திறவையள் போலவெனக் கண்ணம்மா நினைத்துக்கொண்டாள்.

"இவர் அப்பிடியில்லை நெடுக எடுப்பர்... எனக்குவிசர்தான் வாறது.... பிள்ளையளும் வளர்ந்து வருதுகள்" இன்னெரு பெண் சற்று உணர்ச்சிவசப்பட்டு வேதனையைக் கொட்டிக் கொண்டிருந்தாள்.

"இப்ப கத்திப் பிரயோசனமில்லை.... பிள்ளை குட்டி வரமுதல் இதுகளைக் கதைச்சிருக்கவேணும், எல்லாம் அலுத்தாப் பிறகு கத்தியென்ன செய்யப் போறியள்?"

## போர்முனையில் முன்னேறுவேன்



இன்னும் காத்திருக்கிறேன் கட்டளைக்காக...
சிங்கள இராணுவமா?, அந்நியஇராணுவமா?
கணமென இயங்கும் என் துப்பாக்கிகள்,
தலைமை துரோகி எனக்கூறின்
தெருமுனை கனகு முதல்
மருதடி சிவன் வரை
அழித்து வரக் காத்திருக்கிறேன்
எப்போதும் தயாராக
என்விரல்கள் அணைக்கும்துப்பாக்கிகளுடன்....

என் பால்ய நண்பனை சுட்டதற்காக
அம்மாவும் கோவப்பட்டாளாம்,
அதற்கு நான் என்ன செய்ய?
நான் நம்புவதெல்லாம்
அப்பழுக்கில்லாத அந்தத் தலைமையைத்தான்!

சிந்தித்துசெய் என்றனர் வெட்டியர்கள்,
எனக்கு தலைமை சொல்லித்தந்ததெல்லாம்,
துப்பாக்கிக்குழலிலிருந்து
அரசியல் பிறக்கிறது என்பதுதான்.
இது அலசுவதற்கான நேரம் அல்ல
இப்போது அவசியமெல்லாம்
சுட்டுப்போட்டு முன்னேறுவதுதான்!
நான் இன்னமும்
கட்டளைக்காக காத்திருக்கிறேன்...

சின்னா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிண்டல் கலந்த பாணியில் கனகமக்கா சொன்ஞ. அந்த வார்த்தைகளின் அர்த்தத்தை கண்ணம்மா அழுத்தமாக உணர்ந்தாள். அழகைக் காட்டி ....சொல்லப் போனல் தன்னை விற்றுக் கணவனிடம் விசயங்களைச் சாதிக்கும் அவளது வக்கிரமான எண்ணம் ஒருவகையில் பரிதாபகரமான அர்த்தமற்ற உறவு இவளது இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. கதைப்பதோடும், சிரிப்பதோடும் ஒருவரை ஒருவர் மட்டந் தட்டுவதோடும் நின்றுவிடும் இவர்கள் ஒரு நிமிடம்... ஒரேயொரு நிமிடம் சிந்தித்தாலென்ன?

"இவர் எடுத்தாலும் அதிகம் கதையார்.." மீண்டும் சுந்தரம் மாமி அறுக்கத் தொடங்கிஞ. "இப்ப தெரியாது, பிள்ளையள் வளர வயது போக.. ஏன், திரும்பி ஊருக்குகி கலைச்சு விட்டானெண்டால் தெரியும்" அந்தப் பெண் ஆத்திரம் கலந்த பாவனையில் சொல்லியபடி கண்ணம்மாவைப் பார்த்தாள்.

"காசிருந்தா 'பார்ட்டி' எண்டும் பம்பலுக்கு எண்டும்...முஸ்பாத்திக்கு ...ஒரு 'சேஞ்'சுக்கு எண்டு குடிக்கலாம். கஸ்டமெண்டா அலுப்புக்கு கவலையைப் போக்கிற மருந்தெண்டு குடிக்கலாம். ஒரு நேரக் கஞ்சியை எண்டாலும் பிள்ளையளுக்குக் குடுத்திடுவமெண்டு பொம்பிளையள் பாத்துக்கொண்டிருக்க தவறணையால வந்து கஞ்சிக் காசுக்குப் பதிலாக் காலாலை குடுக்கிற கதையள் கற்பனையில்லை." கண்ணம்மா சொல்லி முடிப்பதற்குள் தனக்கு மிஞ்சி எவரும் கதைப்பதை விரும்பாத சுந்தரம் மாமி எரியிற நெருப்பில் எண்ணை விட்டாற் போல அந்தப் பெண்ணைப் பார்த்து "எங்களுக்குப் பிரச்சினையில்லை,.. நாங்க இங்க எப்பவும் எவ்வளவு காலமும் இருக்கலாம்.. இவர் உந்த அலுவலெல்லாம் முடிச்சுப் போட்டார்." நெஞ்சை நிமிர்த்தியபடி சொன்ஞ. நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் அவவிடம் துள்ளி விளையாடின. "இந்தத் தேசத்தில் நீதிமன்றக் கட்டிடங்கள் குனிந்து நிற்கின்றன, நிதி சேர்க்கும் கட்டிடங்களோ நிமிர்ந்து நிற்கின்றன "எப்பவோ எங்கோ வாசித்த வரிகள் கண்ணம்மாவுக்கு ஞாபகம் வந்தன.

"உங்களை அந்த மாமா வரட்டாம்" மழலைக் குரல் ஒன்று சொல்லக்கேட்டு அச்சிறுமியைத் தழுவியபடி எழுந்த கண்ணம்மா "நாங்க.. நாங்க, எங்கட வீடு, எங்கட குடும்பம், எங்கட பிரச்சனை எண்டு மட்டும் பார்க்கிற வரையில இதுகள் உப்படித்தான் இருக்கும்." உறுதியோடு சற்று உரக்கச் சொல்லியபடி திரும்பிஞள்.

"உவவுக்கு வேலைவெட்டி, பிள்ளைகுட்டி இல்லாததில கதைக்கிற கதையைக் கேட்டியளே" வார்த்தைகள் மெதுவாகவும் ஆஞல் மிகவும் தெளிவாகவும் கண்ணம்மாவிற்குக் கேட்டது. அவள் மீண்டும் ஒருதடவை அவர்களைத் திரும்பிப் பார்த்துச் சிரித்துவிட்டு சுகந்தனை நோக்கி நடந்தாள்.

இடைநடுவில் புறப்பட்ட அவனது முடிவு அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர்களிருவரும் வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினர்.

மெல்லியதாக மழை தூறிக்கொண்டிருந்தது. குளிர்காற்று முகத்தை சில்லென்று அறைந்து சென்றது. வானம் இருண்டு கிடந்தது. காற்று இடையிடையே பெருமூச்சு விடுவது போல வீசிக்கொண்டிருந்தது. மரங்கள் அசைவது, கையசைத்துத் தம்மை வழியனுப்புவது போல் கண்ணம்மாவிற்கு இதமளித்தது. இயற்கை வெற்றிடங்களை விடுவதில்லை, எம்மையும் அது அணைத்துக் கொள்ளும் என நினைத்தவளாக குளிரில் விறைத்துக் கொண்டிருந்த தனது கரங்களால் சுகந்தனின் கரங்களை இறுகப்பற்றிஞள். அவன் அவளது கரங்களை மேலும் அழுத்தியபடி "எல்லாம் எப்படி இருந்தது?" எனக்கேட்டான். தளர்ந்து போன ஒரு கிழவனின் குரல்போல அது கண்ணம்மாவிற்குக் கேட்டது. அவள் சிரித்தாள். "ஏன் சிரிக்கிறியள்? இந்த அனுபவங்கள் எல்லாத்தையும் ஒரு நாடகமாப் போட்டா நல்லாவிருக்கும்" அவனது குரலில் இப்போழுது இளமை இழையோடுவதை அவள் உணர்ந்த போதும் "ஓம்! போடுங்கோ, கனக்கப்பேர் கிடக்கிற காஞ்சிபுரங்களைக் கட்ட இடம் வருதில்லையென்று அழுகினம்" அவள் விரக்தியோடு சொன்ஞள்.

"அம்மா, அவை எதுக்கு வருகினமெண்டது எங்கட பிரச்சனையில்லை; நாடகத்திலையோ அல்லது ஒரு சஞ்சிகையிலோ சொல்லுற நாலு கருத்தில ஒருவன்.. ஒரு மனிதன் உருவாஞக்கூட அது எவ்வளவோ பெரிய விசயம்; நல்லகாலம் உங்களைப் போல அந்த நேரம் மார்க்சும், கோர்க்கியும், பாரதியும் யோசிக்காம விட்டது." அவள் சுகந்தனின் விழிகளை வெறித்துப் பார்த்தாள். அவன் விடவில்லை, தொடர்ந்து கதைத்தபடி நடந்தான்.

அவர்கள் ஒரு மலையினிடையில் கட்டப்பட்ட படிகளில் ஏறிக்கொணடிருந்தனர். சுகந்தன் தன்னையும் பாரதி என எண்ணிப்போலும் தன் சின்ன மீசையை முறுக்கிவிட்டு படிகளில் காலை உதைத்துத் தாளமிட்டபடி, தாளலயத்தோடு சொன்ஞன்

"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்- அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு - தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரிகிட.... தத்தரிகிட.... தித்தோம்."

அவன் சொல்லிய வரிகளை மெதுவாக, ஆஞல் ஏதோவொரு நம்பிக்கையுடனும் உறுதியுடனும் சொல்லியபடி கண்ணம்மாவும் படிகளில் ஏறிஞள். பாரதியின் அந்த வரிகள் அந்த மலை முகடுகளில் பட்டுச் சிதறி நம்பிக்கை நட்சத்திரங்களாக உதிர்ந்துகொண்டிருந்தன ●

## கதிரவன்

கைதட்டுவதோடு உங்கள்
கடமை முடிந்ததென்று
கட்டளையிடுபவர்கள்
அஞ்சி நடுங்கும்படி
எழுதுங்கள்,
எல்லோரும் எழுதுங்கள்
என முழக்கமிட்டு வெளிவரும் முத்திங்களிதழ். நூர்மோர் தமிழர் சங்கத்தினால் வெளியிடப்படுகிறது. ஆசிரியர் எஸ்.ஜெகதீசன், Nordmøre tamilsk forening, Dale gt 90, 6500 kristiandsund, Norway.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நடையர் பார்வையில் நாட்டு நடப்புகள்



எங்களூரில் மினிபஸ் பயணங்களில் பாட்டிமார், நடத்துனருடன் (வாய்ப்)போரிலீடுபடுவது ஒரு சுவையான அனுபவம். சில பாட்டிமார் காட்டும் துணிச்சல் ஆச்சரியம் தருவது. 'கட்டையில் போகும்' வயதில் இந்தப் பாட்டிமார் ஏன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு வெளியில் திரிகின்றார்கள் என்று சிலர் எரிச்சல் அடைவதுண்டு. ஆனால் எங்கள் பாட்டிமாருக்கு, நோர்வேப் பாட்டிமார் கேட்டுள்ளார். எமது ஈழ மண்ணில் போராட்டத்தில் தாமும் பங்கெடுத்து எமது அன்னையர் உருவாக்கிய அன்னையர் முன்னணி போராடுவது போல இங்கேயும் பாட்டிமார் உலக சமாதானத்திற்காகத் தமது தள்ளாத வயதிலும் போராடுவது வாழ்க்கை பற்றி எவருக்கும் நம்பிக்கை ஊட்டுகிறது.

தமிழர்களிடையே பிரபலமான விளையாட்டு எது? உதைபந்தாட்டம் என்றுதான் பொதுவாக யாரும் பதில் சொல்வார்கள். அப்படித்தான் நானும் நினைத்துக் கொண்டிருந்தேன். (பெண்களிற்கு ஒருவேளை கிளித்தட்டாக இருக்கலாம், அதனால்தான் நோர்வேயிலும் பெண்கள் கிளித்தட்டு விளையாடுகிறார்கள் போலும்.) இங்கு வந்த சில காலத்திலேயே உதைபந்தாட்டத்தை விடவும் எம்மவரைக் கவரும் வேறொரு விளையாட்டை நான் அவதானித்தேன். செய்மதிகளூடாக இங்கு வந்து சேரும் ஏராளமான சர்வதேசத் தொலைக் காட்சிச் சேவைகளில் சகல விதமான விளையாட்டுகளும் இடம் பெறுவது வழக்கம் என்றாலும், அவற்றையெல்லாம் ஒருபுறத்தில் போட்டுவிட்டு எம்மவர்கள் ஒழுங்காகப் பார்க்கும் விளையாட்டு 'றெஸ்லிங்' என்றழைக்கப்படும் மல்யுத்தம்தான். சனிக்கிழமையானால் சமைக்க, சாப்பிட ஏன் முகம் கழுவக்கூட மறந்து 'றெஸ்லிங்' பார்க்கக் குழுமும் தமிழ் ரசிகர்கள் அதிகம். 'றெஸ்லிங்' பல்வேறு தொலைக்காட்சிச் சேவைகளிலும் ஒளிபரப்பானாலும் 'ஸ்கை'தான் அபிமானத்திற்குரியது. ஒவ்வொரு பட்டப் பெயரையும், பட்டிகளையும், விசேட கோலங்களையும் கொண்டு 'றெஸ்லிங்' 'வீரர்கள்' மோதுவதை அமெரிக்காவில் படமாக்கி அனுப்ப, அதை 'ஸ்கை' ஒளிபரப்ப, எம்மவர் வேறெல்லா வேலைகளையும் விட்டுவிட்டுப் பார்த்து உணர்ச்சி வசப்பட்டுப் பூரித்துப் போய் விடுவார்கள். அநீதியை ஒழித்து நியாயத்தை நிலைநாட்டும்(?) தமிழ்ப்படக் கதாநாயகர்களாக ஹோகனும், அவரைச் சார்ந்தவர்களும், அநியாயங்களின் ஒட்டுமொத்த வடிவங்களாக அந்தரே, மச்சோ மான் போன்றோரும் பங்குபெறும் 'மோதல்'கள் மிகவும் மோசமாகச் சித்தரிக்கப்படுவன. இதைப் பார்த்து ரசிப்பதற்கு எங்களின் அடிமனதில் உள்ள வக்கிர உணர்வுகள்தான் காரணமா என்று புரியவில்லை. இந்த வருட ஆரம்பத்தில் இந்த 'மோதல்கள்' போலியானவை, மக்களை ஏமாற்றிப் பணம் சேர்க்கவே இவை நடத்தப்படுகின்றன, இம் மோதல்கள் உண்மையாயிருந்தால் மோதுவோரின் எலும்புகளையல்லவா பொறுக்கிச் சேர்க்க வேண்டியிருக்கும் என்று எழுதியது ஓர் அமெரிக்கப் பத்திரிகை. பிரிட்டிஸ் பத்திரிகையொன்றும் இதை மறுபிரசுரம் செய்தது. நல்லவேளை எம்மவர் கண்களில் இவை படவில்லை. அவர்கள் இப்போதும் ஹோகன் 'செங்கோலாட்சி' செய்வது பற்றிப் புளகாங்கிதம் எய்தியபடி சனிக்கிழமைகளைக் கழிக்கிறார்கள். மனோரீதியாக வெகுவாகப் பாதிக்கப்பட்டு இங்கு வாழும் எம்மவர் இந்நிகழ்ச்சிகளில் மன அமைதியைத் தேடுகிறார்களோ என்னவோ. பல தொலைக்காட்சி நிறுவனங்கள் பயனுள்ள பல நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. இவற்றைப் பார்த்தால் என்ன என்று நீங்கள் கேட்பது புரிகிறது.





முன்னோடிகளாயிருக்கின்றனர். பிரதி புதனும் பாராளுமன்ற முன்பாக அணுவாயுத எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தும் நோர்வேப் பாட்டிமார் பாராளுமன்றம் மூடியிருந்த கோடை விடுமுறையில், தாங்களும் விடுமுறையை அனுபவித்து, இலையுதிர் காலப் பிரசாரத்தை முதல் அணுகுண்டு வீசப்பட்ட 44ம் ஆண்டு நிறைவு தினத்தில் தொடங்கியிருக்கின்றனர். தற்போது தம்முடன் இயங்கும் பாட்டிமாருக்கு வயதாகி வருவதால், போராட்டத்திற்கு மேலும் பல பாட்டிமார் தேவையெனப் பாட்டிமாரின் அமைப்பில் முக்கிய பங்கு வகிக்கும் 'போர்கில் சொலி' (76வயது)



ஐயா, நாலு விசயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளப் போய் அறிவு வளர்ந்துவிட்டால் என்ன செய்வது?

இங்கு வாழும் இந்தியர்களில் முக்கிய ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு அண்மையில் எனக்குக் கிட்டியது. இங்கு வாழும் இந்திய இலங்கையர்களின் முக்கிய பிரச்சனை ஒன்றைத் தீர்த்துவைக்க தாம் முயன்று வருவதாக அவர் குறிப்பிட்டார். நீண்ட காலம் இங்குள்ள இந்துக்களின் வழிபாட்டுக்கு குறிப்பிட்ட இடம் கிடையாது. எல்லோரும் 'காயமே கோயிலாக...' வணங்கிக் கொண்டிருந்தனர். இப்போது அந்தக் குறையை நீக்க இந்து ஆலயம் ஒன்று ஒஸ்லோவில் கட்டப்பட உள்ளது. வெள்ளி மாலை தோறும் இரவு விடுதிகளுக்குச் செல்வோர் ஒருவேளை இனி 'அருட் பார்வை'க்காக கோயில் பக்கம் போகலாம். எது எவ்வாறிருப்பினும் ஏனைய ஐரோப்பிய நாடுகளைவிட 'அமைதி' தவழும் நோர்வேயில் மனதுக்குத் துக்கம் தரக் கூடிய நிகழ்ச்சிகள் நடக்கும் போதெல்லாம், வெளியில் சொல்ல முடியாத வேதனை மூட்டைகளை கோயில் படிகளில் இறக்கி வைக்கலாம் அல்லவா ? நல்லதுதான் !

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இரவுகள் துயில் கொள்ளா

குளிர் முகில் கழித்து
தரை தாவத் தயாரானது இயந்திரப்பறவை...
"ஒஸ்லோவிற்கு நல்வரவாகட்டும்!"
இனித்த ஒலிபெருக்கி குரல்கேட்டு
நீண்ட சோம்பல் முறித்துக்கொண்டேன்.
என்னிடம் இன்னமும் 'பாஸ்போட்' இருப்பதை
உறுதிப்படுத்திக்கொள்ளவும்,
"ஒஸ்லோநேரம் இரவுபத்துமணி"
என மீண்டும் இனித்து ஓய்ந்தது குரல்.
கை முட்களைச் சரிசெய்து
ஜன்னல் வழியே கசிந்த ஒளிகண்டு
பரவிய என் பார்வை நிலைத்துநின்றது!
வெளியே இன்னமும் பகலென
ஒஸ்லோ சுறுசுறுப்பாக ஓடிக்கொண்டிருக்கிறது..?
எங்கே தவறு?
எங்ஙனம் துணிந்து பொய் உரைப்பர்..?
இயந்திரப்பறவை ஒரு முறை குலுங்கி ஓடி
வேகம் கரைந்து
தன்னை டெர்மினலினுள் பொருத்திக்கொண்டது.
புரியாதபுதிருடன் கதவுதிறக்க காத்திருக்க,
"மறந்தீரோ! இரவிலும் கதிரவன்,
வாசற்படி வந்து சுகம்வினவும்
நள்ளிரவுச் சூரியதேசம் என்பதை?!."
பறவை விழிக்கக்கேட்டு வெளியேவர
நாழிகையாகியும் படுக்கைக்குச் செல்லாத சூரியனும்
குளிர்ந்தும் இருள்போர்வை போர்த்தாத
துருவத்தேசமும் கண்டு வியந்தேன்!
எனது தேசத்தின் துயர்தோய்ந்த
இரவினின்று மீண்ட எனக்கு
இங்கு ஒளித்திரளாய் பகல் மிகநீண்டேதெரிகிறது!...

தம்பா.



## கம்பூச்சியாவிலிருந்து வெளியேறும் வியட்னாம் படைகள்

கம்பூச்சியாவில் நிகழ்ந்த மனிதப் படுகொலைகளிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதாய்க் கூறிக்கொண்டு கம்பூச்சியாமீது படையெடுத்த வியட்நாமியப் படைகள் அங்கு இலட்சக்கணக்கான மக்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் சேதம் விளைவிப்பதிலும் இலட்சக்கணக்கான மக்களை அகதிகளாக்குவதிலும் முன்னைய ஆட்சிக்கு தான் சற்றும் சளைத்தவனல்ல எனபதைக் கடந்த 10 வருடங்களாக நிரூபித்துவந்தது.

கம்பூச்சிய சிக்கலின் பின்னணி:-

இளவரசர் நோர்டாம் சிஹானுக்கின் சர்வாதிகார முடியாட்சிக்கு எதிராகப் போராடி வந்த சீன ஆதரவுபெற்ற பொல்போட் தலைமையிலான கெம்ரூஜ் கெரில்லாக்கள் 1975இல் கம்பூச்சிய ஆட்சியைக் கைப்பற்றினர். தீவிர கம்யூனிசவாதியான பொல்போட் "புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது" பற்றிய தனது வெறித்தனமான கருத்துகளுக்காக 10இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களைக் கொன்றுகுவித்தார். இதன் பாதிப்பு இன்னும் கம்பூச்சியாவை விட்டு மறையவில்லை.

இப்படுகொலைகளை எதிர்த்துக் கம்பூச்சியாவுக்குள் புகுந்த வியட்நாம் படைகளும் மக்களுக்குப் பெருமழிவை ஏற்படுத்தியுடன் கடந்த வருடம் இறுதிவரை வெளியேற மறுத்துவந்தது. எனினும் சர்வதேச அரங்கத்திலும் உள்நாட்டிலும் ஏற்பட்டுவந்த அரசியல் நெருக்கடிகள் காரணமாக 1989 செப்டெம்பர் 30ஆந் திகதிக்குள் தனது படைகளை விலக்கிக் கொள்வதாக அறிவித்தது.

வியட்நாமியப் படையெடுப்பானது ஆக்கிரமிப்புப் படையென்ற ரீதியில் கொள்கையளவில் கெரில்லா இயக்கங்களை ஒன்றுபடவைத்தது. தற்போதைய கம்பூச்சிய அரசை எதிர்த்துப் பின்வரும் கெரில்லா அமைப்புகள் இயங்கிவருகின்றன.

- கெம்ரூஜ் கெரில்லா அமைப்பு; 40 000க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள்.
- இளவரசர் சிஹானுக் தலைமையிலான

– சஞ்சயன் –



www.tamilarangam.net

கெரில்லா அணி; 22 000க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள்.

- சோன்சோன் கெரில்லா அமைப்பு; 15 000க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள்.

இவர்களுக்கு தேவையான இராணுவப் பொருளாதார உதவிகளை சீனு, தாய்லாந்து, இந்தோனேசியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் அளித்துவருகின்றன.

படை வெளியேற்றத்தின் பின்னணி:-

கம்பூச்சியாவில் அமைதியேற்படுத்துவது தொடர்பான ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற கெம்ரூஜ் குழு மறுத்துவந்தபோதும், அக்குழுவின் பிரதிநிதியான கியூசம்பன் பிரான்சில் நடந்த கூட்டத்தில் பங்குபற்றினுர். தொடர்ந்து இவ்வருட முற்பகுதியில் பல ஆண்டுகளுக்கு பின் முதற்றடவையாக கம்பூச்சியப் பிரதமர் ஹொன்செனின் உத்தியோகபூர்வமற்ற தாய்லாந்து விஜயமும் பின் கம்பூச்சிய பிரமருக்கும் (வியட்நாம் ஆதரவுபெற்ற) இளவரசர் சிஹானுக்கும் இந்தோனேசியத் தலைநகரான ஜகார்த்தாவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளும் நல்ல பலனைக் கொடுத்தது. இதைத் தொடர்ந்து இந்தோனேசிய, அவுஸ்திரேலிய அமைச்சர்களுக்கிடையில் ஹானேயில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளும் ஆசியன் அமைப்பின் வெளிநாட்டமைச்சர்களுக்கிடையேயான விசேட மாநாடும் அதைத்தொடர்ந்து இளவரசர் சிஹானுக்கும் பிரான்ஸ்நாட்டு உயரதிகாரிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றியில் முடிவுற்றது.

இதையடுத்து நடைபெற்ற சோவியத்-சீன உச்சி மாநாட்டிலும் இவ்விடயம் முக்கிய இடத்தைப் பெற்றது.



பேச்சுவார்த்தைகள் பின்வரும் விடயங்களை உள்ளிட்டதாக அமைந்திருந்தன:-

1. கம்பூச்சியாவிலிருந்து வியட்நாம் படைகள் வெளியேறல்.
2. எதிர்காலத்தில் மனிதப் படுகொலைகளைத் தவிர்த்தல்.
3. கம்பூச்சிய உள்நாட்டு விடயத்தில் அந்நியத் தலையீடுகளை நிறுத்துதல்.

வியட்நாம் படைவெளியேற்றத்தின்பின் சகலபிரிவினரையும் உள்ளடக்கிய இடைக்கால அரசு தோன்றுமா என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில் சிலமாதங்களுக்குமுன் பிரான்சின் தலைநகரான பாரீசில் பத்திரிகையாளர் மாநாட்டைக்கூட்டிய இளவரசர் சிஹானுக், புதிதாக அமைக்கப்படும் இடைக்கால அரசில் கெம்ரூஜ் கெரில்லாக்களுக்கு எதுவித பதவியோ அன்றேல் முக்கியத்துவமோ வழங்கமுடியாதென்றும்



அவர்களுடைய ஆட்சிக்காலம் இருண்ட ஆட்சிக்காலம் என்றும் குறிப்பிட்ட அவர், ஒவ்வோர் கெரில்லா அமைப்பும் தமது பலத்தை 10 000ஆகக் குறைத்துக்கொள்ள வேண்டும் எனவும் கூறினுர். அதேவேளை கம்பூச்சிய பிரதமர் தமது கருத்தில்; நியாயமான பொதுத்தேர்தல் நடந்தபின்னர் இளவரசர் சிஹானுக் உயர் பதவியொன்றினைப் பெறக்கூடிய வாய்ப்பினை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பொல்போட்டின் இராஜினுமா

கம்பூச்சியாவின் துயரத்துக்கு காரணமான முக்கிய குற்றவாளியும் நாபென் நடுவர் மன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்டவருமான கெம்ரூஜ் கெரில்லா அணித்தலைவர் பொல்போட் தமது பதவியிலிருந்து இராஜினுமாச் செய்துள்ளார். இவருடைய இராஜினுமா அரசியல் அவதானிகள் மத்தியில் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இவருடைய இராஜினுமாவை 3மாதங்களின்பின் கெம்ரூஜ் மத்தியகுழு உறுப்பினர்களான சோன்சானும் கியூசம்பனும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவர் ஏன் இராஜினுமாச் செய்துள்ளார் என்பதற்கான காரணம் கூறப்படாதபோதும் இதிலுள்ள "உள்நோக்கத்தை" புரிந்துகொள்ள முடிகின்றது. அவர் நடாத்திய படுகொலைகள கம்பூச்சியமக்களால் இன்னும் மறக்கமுடியாத அளவுக்கு ஆங்காங்கே அடையாளங்களாகவுள்ளன. தன்னிடம் அதிகாரமில்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதே இதன் உள்நோக்கம் எனக் கருதப்படுகிறது.

ஆனுல் கெம்ரூஜ் குழுவில் உண்மையில் பொல்போட் செல்வாக்குப் படைத்தவராகவும் ஆணைகளை பிறப்பிப்பவராகவும் விளங்கிவருகின்ருர். சிஹானுக் மற்றும் சோன்சான் கெரில்லாக்களை தாக்குவதிலும் அவர்கது ஆயுதக் கிடங்குகளைக் கொள்ளையடிப்பதிலும் கெம்ரூஜ் கெரில்லாக்கள் முன்னணி வகித்துவருகின்றனர். தங்களுடைய இராணுவ முறைகளுக்கு தாய்லாந்து அதிகாரிகளை அனுமதிப்பதில்லை. முகாமிலிருப்பவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தாலோ அன்றேல் ஓடிவிட முயன்ருலோ கொடூரமாகக் கொலைசெய்யப்படுகின்றனர். இவையெல்லாம் கெம்ரூஜ் கெரில்லாக்கள் இன்னும் மாறவில்லை என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது.

தற்போதுள்ள கேள்வி என்னவெனில் வியட்நாம் படைகள் வெளியேறியபின் கம்பூச்சியாவின் நிலை என்ன என்பதேயாகும். அரசுக்கும் கெரில்லா அமைப்புகளுக்குமிடையே ஒற்றுமை தோன்றுமா? அன்றேல் உள்நாட்டு யுத்தம் வெடிக்குமா? என்பதேயாகும். அவ்வாறு உள்நாட்டு யுத்தம் தோன்றுமானுல் தற்போதைய அரசு அதைத் தாக்குப் பிடிக்குமா?

அண்மையில் ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் துருப்புகள் வெளியேறியபின் ஆப்கானிஸ்தான் சிலமணி நேரங்களில் கவிழ்ந்துவிடும் என பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனுல் இற்றைவரை அவ்வரசு நிலைபெற்று நிற்கின்றது. அவ்வாறு கம்பூச்சிய அரசும் தாக்குப்பிடிக்குமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இங்கு நிகழ்ந்தது

## சில நிகழ்வுகள்

அகதி

* அண்மைக் காலங்களில் நோர்வே தேசிய தொலைக் காட்சி இரு தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது. முதல் நிகழ்ச்சியில் சசிகலா கிரிதரன் பரத நாட்டிய விருந்தளித்தார். பிறிதொரு நிகழ்ச்சியில் பொன். சுபாஸ்சந்திரன் மெல்லிசைப் பாடல் ஒன்றைப் பாடினுர். கே. சுந்தர் இசை அமைத்த இப் பாடலை இளவாலை விஜயேந்திரன் இயற்றியிருந்தார்.

* நவராத்திரியை முன்னிட்டு ஒஸ்லோவில் பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடம் நடாத்தும் தாய்மொழிக் கல்விக் கூடத்தில் பன்னிரண்டாம் திகதி சிறுவர்களும், பெற்றேரும் கலந்துகொண்ட விசேட நிகழ்ச்சிகளும், தமிழ்ச் சங்கம் பதினுன்காம் திகதி நடத்திய கலை விழாவில் கர்நாடக



இசை, வாத்திய விருந்து, பரத நாட்டியம், கர்நாடக இசை, நகைச்சுவை நாடகம் என்பனவும் இடம் பெற்றன.

* தீபாவளி தினத்தை முன்னிட்டுத் தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடத்தின் கல்வி நிலையத்தின் நிகழ்ச்சிகளில் சிறுவர்களுக்கான அறிவுப் போட்டி, சிறப்புரைகள் என்பன இடம்பெற்றன.

ஒக்டோபர் இரண்டாம் வார இறுதி ஒஸ்லோ தமிழர்களுக்கு மறக்க முடியாத நாட்களாகியது. 14ம் திகதி சனிக் கிழமை வாணி ஜெயராமின் இசை நிகழ்ச்சி நிகழ்ந்தது. மறுநாள் மாலை சுவடுகள் விமர்சனக் கூட்டம், தமிழ்ச் சங்க நவராத்திரி விழா என்பவற்றேடு இங்கு வருகை தந்திருந்த இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் க.பிரேமச்சந்திரன் கலந்துகொண்ட சிறு கூட்டமொன்றும் இடம்பெற்றன.

இந் நிகழ்ச்சிகள் இடம்பெற்ற தினம் மாலை நோர்வேஜியத் தொலைக் காட்சியின் செய்தியில் க.பிரேமச்சந்திரன் கலந்துகொண்ட கூட்டம் குழப்பப்பட்டதாகவும் கூட்டம் நடத்தியோர் தாக்கப்பட்டதாகவும் செய்தி ஒளிபரப்பானது. இச் சம்பவம் பற்றி உடன் செய்தி பரவிய போதும் தொலைக்



காட்சியின் 'எழுதுசெய்தி'யும்(text) மாலைச் செய்தியும்தான் இதனை ஊர்ஜிதம் செய்தன.

சம்பவத்தை நேரடியாகப் பார்த்தவர்களின் கூற்றுப்படி இத் தாக்குதல் முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருந்தது தெளிவாகியுள்ளது. கிறிங்சோ மாணவர் விடுதியில் நடத்தப்பட்ட இக் கூட்டத்தில் 'அழையா விருந்தாளிகள்' சிலர் கலந்துகொண்டனர். திடீரென உள் நுழைந்த இவர்கள் கூட்ட ஆரம்பத்தில் 'ஈ.பி.ஆர்.எல்.எவ்பால் கொல்லப்பட்ட பொது மக்களுக்கும் மறைந்த போராளிகளுக்கும் அஞ்சலி' எனக் கூற எல்லோரும் எழுந்து அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து நாங்கள் எதுவாயிருந்தாலும் பேசலாம் என்ற

பிரேமச்சந்திரனின் கூற்றை நிராகரித்து அவரைப் பேசவிடாது தடுத்துத் தாக்கத் தொடங்கினர். தாக்குதலில் பிரேமச்சந்திரன் காயமுற்ருர். கூட வந்திருந்த எல்.கேதீஸ்வரன் படுகாயமடைந்தார். தாக்குதலில் மிளகாய்த் தூள், கதிரைக் கால்கள், மேசை என்பன பாவிக்கப்பட்டன. சம்பவம் நடந்த இடத்தில் ஒரு கத்தியும் காணப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. கூட்டம் ஆரம்பிக்கு முன்னரே தொலைபேசி மூலம் கூட்டத்துக்குச் செல்ல வேண்டாமென மாணவர்கள் மிரட்டப்பட்டதாக நோர்வேஜியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது.

தாக்குதல் தொடங்கியதும் சிலர் வெளியே தப்பி ஓடினர். ஓடிய சிலர் தொலைபேசிகளைச் சிலர் 'காவல்'

## போராடும் காந்தி

**"உனது கருத்தைப் பிழையெனக் கூறி நான் நிராகரிக்கிறேன். ஆனல் அதனைச் சொல்வதற்கான உனது உரிமைக்காக நான் போராடுவேன்" என்று, மகாத்மா காந்தி அடிக்கடி கூறுவது இங்கு நினைவில் நிறுத்திக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றே. எனவே, சமூகம் வளரவேண்டுமாயின் சிந்தனை வளரவேண்டும்; சிந்தனை வளரவேண்டுமாயின் சிந்தனைப் பண்பாடு வளரவேண்டும்.** ■

**நன்றி – திசை.**

காக்கக் கண்டனர். தாக்குதல் மோதலாகலாம் என்று அஞ்சிய சிலர் கிறிங்சோ 'தேபான்' நிலையத்தைத் தவிர்த்து சொங்ஸ்வானில் 'தேபான்' ஏறினர்.

இரவு தொலைக் காட்சிக்கு வைத்திய சாலையில் வைத்துப் பேட்டியளித்த பிரேமச்சந்திரன் தாக்கியவர்கள் விடுதலைப் புலிகள் எனத் தான் அறிந்ததாகக் கூறினுர். சகல செய்தித் தொடர்பு சாதனங்களும் தாக்கியவர்கள் விடுதலைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகளே எனக் கூறினர். 'அப்தன் போஸ்தன்' பத்திரிகை ஒஸ்லோவில் தமிழ் 'யுத்தம்' என்று எழுதியது.

சம்பவம் நிகழ்ந்த மறுதினம் கூடிய தமிழ் நோர்வே மக்கள் இணைவு கூடச் செயற் குழு கருத்துச் சுதந்திரம் தடுக்கப்பட்ட இச் சம்பவத்துக்குக் கண்டனம் வெளியிட்டது. இக் கூட்டத்தில் ஆரம்ப முதலே இணைவுகூடத்தை வளர்ப்பதில் பெரும் பங்காற்றிய பிதா ஸ்ரீக்கும் கலந்துகொண்டார்.

தாக்குதல் சம்பவம் பல துறைகளில் எதிரொலித்தது. மறுதினம், பல்கலைக் கழக மொழித் தேர்வில் 'நேற்றைய சம்பவம்' கேள்வியாகியது. மாநகரசபை ஒன்றின் அகதிகள் ஆலோசகர் 'இவ்வளவு

ஆபத்தான பொருளை (மிளகாய்த் தூள்) எப்படிச் சாப்பிடுகிறீர்கள்? என்று தமிழர்களைக்கேட்டாராம்.

பாடசாலை விடுதி ஒன்றில் தமிழ் மாணவரிடம் மிளகாய்த் தூள் இருப்பதாக சக மாணவர் ஒருவர் புகாரிட மிளகாய்த் தூளும் பறிபோய் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.



• இந்திய நோர்வீஜிய கலாசார அமைப்பு காந்தி ஜயந்தி தினத்தையொட்டி சர்வதேச கவிதை விழாவை நடாத்தியது. வெளியுறவுச் செயலர் திருமதி. ஹெல்கா எம். கேணஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். ஏனைய நாட்டுக் கவிஞர்களுடன், வ.ஐ.ச. ஜெயபாலன், மைத்திரேயி, இளவாலை விஜயேந்திரன், தம்பா ஆகியோரும் பங்கேற்றனர்.

---

கடந்த இதழில் சில தவறுகள் நேர்ந்திருந்தன. சர்வேந்திராவுடனான பேட்டியில் 'சக்தி பிறக்குது' 1985ல் இலங்கையில் மேடையேற்றப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது தவறானது. இது 1986ல் மேடையேற்றப்பட்டது என்பதே சரியானது. இந் நாடகத்தில் நாடக அரங்கக் கல்லூரி நடிகர்களும் பங்கேற்றிருந்தனர் என்ற தகவலும் விடுபட்டுப் போய்விட்டது.

நோர்வே அரசியல் கட்டுரையில் ஒரு பந்தி இடம்மாறிப் பொருத்தப்பட்டிருந்தது. 'முன்னொரு காலத்திலே..' கட்டுரையில் எழுதியவரின் பெயர் - லண்டன் வாசன் - விடுபட்டுப் போயிருந்தது.

தவறுகளால் வாசகர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்கு மனம் வருந்துகிறோம். தவறுகளைத் தவிர்க்க முயல்கிறோம்.



இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான உணவுப் பொருட்களை மலிவான விலையில் நீங்கள் பெறவேண்டுமானால் எங்களிடம் வாருங்கள்.

CEYLON MART'S

21, DRONNINGSGATA, 0152. OSLO.1. T.P: 332619

உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் நோர்வேயின் எப்பகுதிக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

13 வ 14

அன்றைய TOYEN KRO
இன்றைய DARBAR

அன்றும் அதே சுவை
இன்றும் அதே சுவை




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்